32

32

சிரவைக் கௌமாரசபை வெளியீடு.

உ

குருவே துணை.

குன்னத்தூர்புதூர்

ஸ்ரீ விநாயகர், ஸ்ரீமந் நாராயணமூர்த்தி
தோத்திரத் திரட்டு
இகபரசாதன விளக்கம்.

★

ஆசிரியர்கள் :
சிரவணபுரம் கௌமார மடாலயம்
ஸ்ரீமத் கந்தசாமி சுவாமி அவர்கள்
திருவாமாத்தூர் கௌமார மடாலயம்
தி. செ. முருகதாச பிள்ளை அவர்கள்.

★

பதிப்பாளர் :
குன்னத்தூர்புதூர்
ஸ்ரீ ராமாநுஜ பக்தஜன சபையார்.

★

சர்வசித்து-ஷ மிதுனரவி.

1947

[விலை அணா 6

O2:417
N47

சிரவைக் கௌமாரசபை வெளியீடு.

உ
குருவே துணை.

குன்னத்தூர்புதூர்

ஸ்ரீ விநாயகர், ஸ்ரீமந் நாராயணமூர்த்தி
தோத்திரத் திரட்டு
இகபரசாதன விளக்கம்.

★

ஆசிரியர்கள் :
சிரவணபுரம் கௌமார மடாலயம்
ஸ்ரீமத் கந்தசாமி சுவாமி அவர்கள்
திருவாமாத்தூர் கௌமார மடாலயம்
தி. செ. முருகதாச பிள்ளை அவர்கள்.

★

பதிப்பாளர் :
குன்னத்தூர்புதூர்
ஸ்ரீ ராமாநுஜ பக்தஜன சபையார்.

★

சர்வசித்து-வரு மிதுனரவி.

1947

உரிமை பெற்றது] [விலை அணா 6

உ

குருவே துணை.

கும்பாபிடேக கால விளக்கம்.

எண்சீராசிரிய விருத்தம்.

சருவசித்தாண் டானிமதி பதினு றின்கட்
 சார்மதிநாள் துவாதசிதோ யநுட விண்மீன்
மருவுசுப தினஞ்சிம்ம லக்கி னத்தில்
 மகிமைபொலிந் திடக்குன்னத் தூர்பு தூரில்
பொருவில்வி நாயகமூர்த்தி யவிர்சீ தேவி
 பூதேவி யிசைநாரா யணப்பெம் மானும்
திருவளரற் புதக்கோயின் மேவிக் கும்பத்
 தேம்புனன்மூழ் கினருயிர்மெய் திளைக்க மாதோ.

தெய்வமே துணை.

Q2:4.17
N47

குன்னத்தூர்புதூர் — புது ஆலயம்.

5

உ

குருவே துணை.

முகவுரை.

"இதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே."

— ஸ்ரீ சம்பந்தர்.

"குன்னத்தூர் புதூர்த் தோத்திரத் திரட்டு," "இகபர சாதன விளக்கம்" என்னும் இந்நூல்களின் ஆசிரியர் ஸ்ரீமத். கந்தசாமி சுவாமிகள் இந்நூல்களுக்கோர் முகவுரை யெழுதுமாறு பணித்தார் எனக்கு அத்துணைப் பேராற்றலின்று. ஆயினும் அவரது கட்டளையை மறுத்தற் கஞ்சியே இவ்வுரையை யெழுதுகிறேன்.

நூல்:— இந்நூல் ஸ்ரீ விநாயகமூர்த்தி பதிகத்தில் காப்பு முதல் 12 செய்யுள்களும், ஸ்ரீ நாராயணமூர்த்தி பதிகத்தில் காப்பு முதல் 12 செய்யுள்களும், விருத்தங்கள் 11-ம் சந்தக்கவி யொன்றும், வாழி விருத்தமொன்றும் திருவாமாத்தூர் ஸ்ரீ முருகதாச பிள்ளை அவர்களியற்றிய நாராயணமூர்த்தி பதிகமொன்றும் சுவாமிகளியற்றிய இகபர சாதன விளக்கம் என்னும் உரை நடையையும் தன்னகத்தே கொண்டதாய் மிளிர்கின்றது.

தலம்:— இத்தலம் கோவை சத்தியமங்கலம் ரோட்டில் 13-வது கல்லில் அமைந்துள்ளது. இத்தலத்தில் விநாயகப் பெருமானுக்கும், ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீமந் நாராயணமூர்த்திக்கும் திருக்கோயில்கள் சிறப்புறப் புதிதாக அமைந்திருக்கின்றன.

தலத்தின் பெருமைகள் இந்நூலில் பல இடங்களிலும் பயின்று வருகின்றன. நிற்க இந்நகர மக்கள் சிரவணபுரம் கௌமார மடாலயம் சதுர்வேத சித்தாந்த சண்மத சமயாதீத அத்துவித கௌமார சபையின் நெருங்கிய பக்தர்கள் அதற்குச் சான்றாக "முத்தியடையானெனினும் கொன்றானுண்ணுமுறை மனிதர்க்கமைப்பவனே முதல்வனென்னும் புத்தியெனக்களித்த தெய்வம்" என்ற ஸ்ரீ தண்டபாணி சுவாமிகளது அருளுரையை உள்ளூன்றிய இதயத்தினர்.

"கொலையும் புலையுங் களவுந்தவிர்" என்னும் மூதாட்டியார் மொழியை தம்மளவில் தமது நகரத்தளவில் அன்றி நாட்டளவிலும் நாட்டவல்ல ஊக்க மிக்கவர். உயிர்களுக்கேற்படும் பசியை நீக்க அன்னதானம் புரிந்தும் இன்னும் பிணிபயங்களையும் போக்கும் விதத்திலும் முயன்றுவரும் கருணையமையப் பெற்றவர்கள். இவையனைத்தும் மற்றவர்களுக்கும் படிப்பினை யூட்டவல்லதாம்.

இவர்கள் சிறப்புவகையில் சிவ பக்தியும் குல முறைப்படி "இராமாநுஜ பக்தஜன சபை" ஏற்படுத்தியும் திருமண்ணணிதல் முதலிய வைணவ சம்பிரதாயக் கொள்கையிலமைந்தாரெனினும் அந்தரங்க நிச்சயத்தில்

"சேயவார்சடைச் சிவனென வயனெனத்
தேவர் கோனென, மற்றும், ஆய பல் பொருளெனத்

முகவுரை

திருமாலுறு மதிரகசியந்தன்னைத், தூயசீர்ச் சட
கோபன் முன்வெளிப்படச் சொல்லியுந் துயரெய்தித்
தீயர்பாலிது பரமதுபரமெனச் செயுஞ்சமர்க் கிசையேனே."

என்ற தண்டபாணி சுவாமிகளது வாக்கிய சித்தாந்தப்படி தெய்வமொன்றென்று கருதும் தீர்க்க விவேகத்துடன், சிவன் கணபதி, முருகன் அம்பிகையென்ற சகள வடிவங் களனைத்தையும் பேத புத்தியினல் பிணக்கமுட் பொருந்தி வாதமிட்டுழலா மதிநலம் படைத்து வழிபடும் தன்மைக்கு எடுத்துக்காட்டாக ஸ்ரீ விநாயகமூர்த்தி, ஸ்ரீ நாராயண மூர்த்திகட்கு அமைந்திருக்கும் திருக்கோயிலே சான்ருக நிற்குங் காட்சிப் பிரமாணமாகும்.

நூலாசிரியர்கள் :— கோவைக் கடுத்த சிரவைக் கௌமார மடாலய ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமி களது முதன் மாணுக்கராகிய ஸ்ரீமத். கந்தசாமி சுவாமி களாவார். பொன்மலர் நாற்றமுடைத்து என்ருற்போல் தவத்தொடு நிறைந்த பெரும் புலமை நலமுடையவர். எந்தைக்குங் குருவாய் விளங்குமென் ஞானுசிரியருமாவார். ஆசு முதல் நாற்கவியும் பேசுங் கவியூற்று. இகம் பர மென்னு மிருவகைச் சாதனமுடையவர். அவர் கொண்ட சாதனத்தை வெள்ளிக்கிழமைதோறும் அன்பர்களுக்கு எடுத்துரைப்பதோடன்றி அவ்வுரையை யூன்றிக் கற்று அனைவரும் பயனெய்துமாறு நூலாகவே செய்து தந்துள் ளார். இந்நூலானது உயிர்க்குறுதி பயக்கும் மேம்படு கற்பின் திட்பம் வாய்ந்தது. நாடல் சான்ற பாடுசால் மெய்ப்பொருள் பலகொண்ட நூலாகும். ஊன்றிக் கற்போர் உள்ளத்தில் சித்துணர்வானது விண்டுச் சேர்ந்த பெருமழை போலச் செல்லாது நிற்கும். ஆசிரியர் வட

மொழிப் புலமையையும் புலப்படுத்தும் ஆசிரியருடைய அனுபவ அறிவுடன் கலந்த இந்நூல் பெரும் பயனளிப்ப தாகும். மற்றொரு ஆசிரியர் திருவாமாத்தூர் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமி அவர்களது பௌத்திரர் முருகதாச பிள்ளை அவர்களாவர்.

நூலாராய்ச்சி :— இந்நூலின் சொல், பொருள், ஓசை என்னும் முச்சுவைமிக்க பாக்கள் பல படிப்பாரது நெஞ்சை யள்ளுந் திறத்தனவாயிருக்கின்றன. "காலை வெய்யோற்கு முன்னோட்டுக் கொடுக்குங் கங்குல் குறும்பர்" என்ற ஆழ்வார் திருவாக்குக்கிணங்க பழி பவங்களனைத்தும் இறைவனது திருமுன்னர் நில்லாவென்று ஆசிரியர் பல இடங்களில் கூறியிருக்கும் பெற்றி சிந்திக்கப் பாலது.

விநாயகர் பதிகம் முதற் செய்யுளில் வருணித்தபடி இறைவனது உருவெளிப்பாட்டை "நெஞ்சம் நெக்குருகி ....மோடி செய்திருத்தல் முறை கொலோ" என்று நாலாம் கவியில் காண விழைதல்

"பாவிநீ யென்று ஒன்று சொல்லாய்
பாவியேன் காணவந்து"

என்ற நம்மாழ்வாரது பாசுரத்தை நினைவூட்டுகிறது. 3-ம் கவியில் நினைத்தலுஞ் செய்தலோடொக்கும் என்னுங் குறட் கருத்தை யுட்கொண்டு "தொண்டனேனென்று புத்தியிலமைந்தேன்" என்றது பாராட்டத்தக்கது.

"உந்திடு நலங்கள் முந்திடு குன்னத்தூர்" என்றது தலச் சிறப்புரைத்ததல்லாமல் விநாயகப் பெருமான் அவண் வாழ்வாருக்கு நலங்களை உந்தி முந்திடச் செய்வார் என்ற

தொனிப்பொருள் கூறியதுமாம். வித்தையையுடையவன் பகைவனுயினும் ஒரோவழி போற்றுதல் உலக இயல்பு. அங்ஙனமிருக்க தம்மை அத்தன்மையனுகவுங் கருதாது "வித்தையில் ஏதிலனெனக் கருதினையே" என்று ஆசிரியர் இறைவனிடம் இரந்து குறையுற்றநிலை பத்திச்சுவை கெழுமியதாக இருக்கிறது. 11-ம் கவியில் "கன்றிலா மலட்டுப் பசுவென........இசைகிலன்" என்ற அடிகள் "ஊரா மிலைக்கக் குருட்டா மிலைப்பது" போலல்லேன் என்ற ஆழ்வாரது திருவாக்கைச் செவ்வனே தன்னுள் அடக்கி படிப்பாரைக் கழிபேரு வகையில் ஆழ்த்துந் தரமுடையது.

நாராயணமூர்த்தி பதிகத்தில் "புள்மேல் வந்தணைத் தருள்" என்றது கருடன் "கடைக்கணருள் பார்த்து நேரே பறந்து வரும்" இயல்புடையவனுகையால் விரைவில் வந்து அருள்வான் என்றபடியாம்.

"கைய பொன்னழி வெண்சங்கொடு
காண்பானவாவு வன் நான்"

என்ற ஆழ்வார் திருவாக்கையும் "பற்றிடுங் கர நேமியைச் சங்கைப் பார்க்கில்" என்ற 6-ம் கவியுந் தொடர்ந்து படித் தின்படைக. 7-ம் கவியில் "மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத்தமுதே ஊறிநின்றென் னுள் எழுபரஞ்சோதி" என்ற நம்முடைய திருவாசகக் கருத்து அமைந்திருத்தலைக் காணலாம்.

அவாவென்ப எல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும்
தவாப் பிறப்பீனும் வித்து"

ஆகையால் 11-ம் கவியில் கட்டவாவடி வேரறுத்து என்று குறிப்பிடுகிருர். இறுதிக்கவியில் "கும்பிடுதவத் தொண்டர்

நெஞ்சகம்போற் குலவுசீர்க் குன்னத்தூர்" என்றது. தொண்டர் சீர்பரவுவதாகும்.

முருகதாச பிள்ளை அவர்களியற்றிய நாராயணமூர்த்தி பதிகத்தில் திருமாலுடைய பல திருவிளையாடல்களைத் தொகுத்துக் கூறியிருப்பது போற்றத்தக்கது. சந்தக்கவியில் தன்னச் சந்தமமைந்த "கொண்முச் சேர நீடிய தென்னைச் சோலைமேவிய குன்னத்தூர் புதூருறை பெருமாளே" என்ற ஈற்றடி இயற்கையின்பந் தோய்ந்ததாய் அமைந்திருக்கின்றது. இகபர சாதனம் என்னும் உரை நூல் இம்மை மறுமைப் பயனைப் பெறுவதற்கு வழி கூறுகின்றது. இவ்விருவகைச் சாதனங்களையும் சாதிப்பது ஆன்மாவாம். பதியாகிய சத்தும் பாசமாகிய அசத்தும் ஒன்றனை யொன்று அறியாது. எனவே சத சத்தாம் உயிர் இவ்விரண்டனையும் அறியும். அறிய இறைவன் உயிர்களுடன் கலப்பினால் உடலில் உயிர்போல ஒன்றாயும், பொருட்டன்மையால் கண்ணும் அருக்கனும் போல வேறாயும், தொழிற்பாட்டால் கண்ணொளியும் ஆன்மபோதமும் போல உடனாயும் இரண்டறக் கலந்து நிற்கிறான். உயிர் தன்னியல்பறியாது கருவிகளால் மயங்கி நிற்கும். உயிர்களுக்கு முற்செய்தவத்தால்தான் ஞானம் நிகழும் தவம் முற்றிய உயிர்களுக்குச் சிவம் அதன் சிறப்பியல்பைக் குருவுமாயுணர்த்தும். அறிவித்தாலறியுந் தன்மையுடையது ஆன்மா ஆகையால் உணர்த்த உணரும். ஆனால் சார்ந்த தன் வண்ணமாகக் கூடியது உயிர். அறியுந் தன்மையுண்டென்பது பெறப்படுகிறது. "பல கலையுலகினிலவுதலானும்" என்ற சங்கற்ப நிராகரணத்தில் கூறியது ஆன்மாவுக்கு அறியுந்தன்மையுண்டென்பதை வலியுறுத்துவதாகும்.

உணர்த்துவோன் பதி. உணர்வது பசு. புண்ணியப்பயனால் உயிருக்குயிராய் இதுவரையுள் நின்றுணர்த்திய முழுமுதற்பொருள் புறத்தே ஞானசிரியனாக வந்து நீ "ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை" என்று உணர்த்த உயிர் இறைவனை நாடிச் செல்லும் உயிர் அறிவினால் அறியப்பட்டன அழியும். உயிர் ஐம்பொறிகளைப் பற்றும்போது தன்னையுணராது. உள்நின்று இறை உணர்த்த இறைவனை நாடிச் செல்லும். அப்பொழுது "நல்லோரிணக்கமும் நின் பூசை நேசமும்" என்ற ஆன்றோர் வாக்கியத்தின் அநுபவம் உண்டாம்.

தவம் முற்றிய புண்ணிய சீலர்களது பெருமை சுவர்க்க வியலில் பரக்கக் காணலாம். புண்ணியப் பயனையூட்டி யொழிப்பதே சுவர்க்க இயல்பாகையால் அவர்களியல்பு திருவுடையதாகவும், பேரின்பத்தைக் கொடுக்கக் கூடியதாகவும் பொலிவதைக் காணலாம். எல்லையில்லாத துன்ப அநுபவங்களை இயற்றி ஆன்மாக்களது பாவ கன்மங்களைப் போக்கும் நரகபூமி யென்பதொன்றுண்டாயினும், அதுதானே ஆன்மாக்களைப் பற்றாது, ஆன்மாக்களும் அதிற் புகுத இச்சிப்பதில்லையெனினும் இவ்வுலகிலே மக்களெனப் பெயர்பூண்ட நரகர் பலர் வாழ்கின்றனர் என்றும் அவர்களுடைய இலக்கணம் இன்னதென்றும், பெயர் கூறாது தெற்றென நரகவியலில் விளக்கியுள்ளார். அத்தகையோரைக் காண்டலேயன்றி காணப்படுதலும் தீதென்று வலியுறுத்துவது பாராட்டத்தக்க தொன்றாம். அதுவே ஆன்ம லாபமுமென்று கூறுகிறார்.

மண்ணுலகிலே புண்ணிய பாவ அழுக்குகளைப்போக்கி நினைத்தல், செய்தல், கூடுதல், அறிதல், என்ற நான்கு வழி

களாலும் செலுத்துவதாகும். சரியை, கிரியை யோகத்தைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியே வீடுபேற்றைக் கொடுக்கும். அவரவருடைய பக்குவ நிலைக்குத்தக்க பயனை அளிப்பது மண்ணுலகம். தவம் முற்றியவர்கள் சுவாமிகள் போன்ற நல்லாசிரியனை நாடி அவர் வாயிலாக மெய்ப்பொருளை யடையும் வழிகளை உணர்த்த உணர்வார்கள்.

ஞானத்தைக் காண அவாவுற்ற சரியை கிரியையாளர்களுக்கு ஆலயம் துணையாகி நிற்பதாம். விழவு வீற்றிருக்கும் அவ்வவ் விடங்களுக்குச் சென்று வழிபாடு செய்தும், முன்னைப் பிறவித் தவப்பயனால் பேரின்பத்தையடைந்த பெரியோர்கள் வரலாறுகளைக் கேட்டும் மகிழ்வர். இச்சையை ஒடுக்கத் தக்க இடமுமாம். ஆலய வழிபாட்டிலே சிறந்து வீடடைந்த ஆன்றோர் அப்பர், ஆண்டாள் முதலானவர்கள் வரலாறு கூறியிருப்பது சிறந்த அறிவுரையாகும்.

"கோயிலில்லாவூரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஆன்றோர் வாக்கு இவண் கருத வருகின்றதன்றோ? ஆலயமானது ஆன்றோர்களுடைய மகிமை முழுதும் திரட்டி நின்று காட்சியளிப்பதாகும். இதனாலன்றோ மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் அவ்வவ்விடங்களில் சிறந்த கோவில்களைக் கட்டுவித்து அதில் பல கல்வெட்டுகளைக் கொடுத்துள்ளனர். அவர்களும் அதன் பயனையடைந்து நம்மனோரையும் பயனடையுமாறு வழிகாட்டியது நம்முடைய நல்வினைப் பயனே.

இறுதியாக விக்கிரக வியலிலே கிரகத்தினுடைய விளக்கமும், அதன் வகை முதலாயின தெளிவுபடக் கூறி யுள்ளார். சரியை கிரியை யாளர்களின் பணிவிடை யேற்று அதன் பயனாக அவர்களுக்குத் தவத்துணர்வை விருத்திசெய்யும் சிறப்புடையதாம்.

அச்சிட்டோர் :— எனவே இத்தகைய சிறந்த நூல் களையும் அதன் பெருமைகளையும் நன்குணர்ந்து அன்புடன் மனமுவந்து அச்சிட்டு உதவிய திருவாளர் இராமாநுஜ பக்தஜன சபையார்கள் இகத்துள சுகமும் பரத்துள போகமும் இடையரு தெய்துமாறு குமாரக்கடவுளுடைய பொன்னடித்துணைகளை யானும் பன்முறையும் வாழ்த்தி வணங்குகின்றேன்.

வாழ்க! உலகெலாம்.

இங்ஙனம்,

கணபதி,
15—6—1947.

ஸ்ரீமத். கந்தசாமி சுவாமிகள் மாணவி
சி. குழந்தையம்மாள்.

உ

குருவே துணை.

ஸ்ரீ விநாயகமூர்த்தி பதிகம்.

காப்பு — வெண்பா.

கொங்குபொலி மேன்மை குலவுகுன்னத் தூர்புதூர்
தங்கு விநாயகன்மேற் சாற்றுதுதிக் — கிங்கு
துணையாகு மன்பருளந் தோய்ந்திருமை யுஞ்சேர்
புணையாகும் பாதம் புயம்.

எழுசீர் விருத்தங்கள்.

இளமதிச்சடையு முக்கணுந்துவர்வெற் பிசைதிரு மேனியுந் தான, வளமலிகரட வணியுந்தொண்டலமும் வான்மருப்புடன்சதுர்ப் புயமுந், தளமலர்ப்பதமு மிடையருதென்முன் றரிசனம்பெறவளித் தருளி, யுளமகிழ் சித்தி யளித்தருள்குன்னத் தூர்புதூர்விக்கினேச் சுரனே.

கவப்பிணிப்புற்ற மரணவாதனைதோய் காயவாழ்க்கை யைச்சுக மென்றே, யவப்பொழுதொழித்துப் பழிபவத் தினுக்கா ளாகினேன்றனைத்தடுத் தாண்டு, தவப்பெருக் கமைமுக் கலன்முனோரிதயந் தழைத்தபேரின்பளித் தருளி, யுவப்பிசைத்திடுவா யடைக்கலங்குன்னத் தூர்புதூர்விக் கினேச் சுரனே. (௨)

பத்திமிக்கமைந்துன் றிருவடியுளத்திற் பதித்திடையீ டற மதித்துத், துத்தியம்புரியே னயினுமுனது தொண்ட னென்றிசைதரு மெண்ணம், புத்தியிலமைந்தேனென்ன வாமுற்றப் புரிகுவதுன்கட னடியேற், கொத்திசைந்தருள் வாய் நத்திசைக்குன்னத் தூர்புதூர்விக்கினேச் சுரனே. (௩)

கோடியுஞ்சிறிதென் றிடும்வினையாடற் குலம்பல வியற்றுநீ யுன்பால், நீடியகால மாகவென்குறைகள் நீக்கி யாண்டருளென விரந்தும், மோடிசெய்திருத்த லுனது சந் நிதிக்கா முறைகொலோதீயவல் வினைகள், ஓடியதொண்டர் வாழ்த்துசீர்க்குன்னத் தூர்புதூர்விக்கினேச் சுரனே. (௪)

பேயெனப்பீடித் தலைக்குழூவாசைப் பெருக்கமுற் றோர்நிலை யின்றி, நாயெனத்திரிவேன் றனைக்கடைக்கண்ணு னுடிநின்னருட்கட லாழ்த்தித், தாயெனப்பரிவிற் காத்தரு ளுன்பொற் சரணலாற்சரணமற் றறியேன், ஓயெனக் கூவிப் பவந்தெறுங்குன்னத் தூர்புதூர்விக்கினேச் சுரனே.

அன்னைதந்தையரென் றிவ்வுடற்கமைந்தா ரகத்திடைத் துயரருப் பந்தந், தன்னையேசெல்வ மென்றளித்தவற்றைத் தான்புரந்திடவிடுத் தகன்றார், முன்னையாந்தேவே நின்னரு

ளாலம் மூடமாஞ்சிறைவிடுத் தடியே, னுன்னையேபொரு ளென் றடைந்தனன்குன்னத் தூர்புதூர்விக்கினேச் சுரனே. (௬)

வந்திடும்பிறப்பும் போக்கிடுபிறப்பு மத்தியிலிசைதரு மிருப்பும், நொந்திடும்பலவா கியதுயரூடே நுழைத்தலி விளைத்தன னறவே, சிந்திடும்படிநின் கண்ணருட்சிறிதே செலுத்தியாண் டருள்புரி சரணம், உந்திடுநலங்கண் மூந் திடுங்குன்னத் தூர்புதூர்விக்கினேச் சுரனே. (௭)

அமைதியாந்தவந்தா னத்தினைமறைத்தே யக்கிரமக்கலி பாவச், சுமைநரர்மீதிற் சுமத்தியாட்டிடவே துணிந்ததீங் கிதன்றிற லொழிப்பான், இமையவரேத்து மிசைமொலி சித்தி யினனையீந்தருளவெண் ணிடுவாய், உமையருந்தவமா மதலையேகுன்னத் தூர்புதூர்விக்கினேச் சுரனே. (௮)

சீர்த்திமிக்கிசையுன் சேவடித்துணையே சிந்தைசெய் திடவிழை வேனை, யீர்த்துலகப்பொய்க் கலகவல்வழக்கி லிசைப்பதுகன்மநீ யதனைப், பார்த்தும் விந்தையிலே திலரெனவிருக்கிற் பாவியேற்குறுதுணை யெவரே, ஊர்த்திரட் குயர்வாங் கீர்த்திதோய்குன்னத் தூர்புதூர்விக்கினேச் சுரனே. (௯)

தட்டுமோவின்ன மாயைநின்னருட்சீர் தாங்கிடா தலைப்பதீங் கெதுநாண், மட்டுமோபத்தி சொட்டுமோ வுண்மை வரம்பிலானந்தமென் னுளத்தே, யெட்டுமோ வுலகத் துயிரெலாமின்ப மெய்திடவென்னுட னுட, வொட் டுமோவிரங்கி யருள்செய்வாய்குன்னத் தூர்புதூர்விக்கி னேச் சுரனே. (௧0)

கன்றிலாமலட்டுப் பசுவெனப்புவியோர் களிப்புறப் புரியுபகார, நன்றிலாதுனது திருவடித்துணைச்சீர் நாடுஞானுநுபூதியிலே, நின்றிலாதுள்ள நெக்குநெக்கிருகண் ணீர்வடிந்திடுமுயர் பத்தி, ஒன்றிலாதுறுதற் கிசைகிலன்குன்னத் தூர்புதூர்விக்கினேச் சுரனே. (௧௧)

போற்றியற்பூர்வ புண்ணியப்பயனுற் புனிதமானிடப் பிறப் படைந்துள், ஊற்றியற்பத்தித் தொண்டர்வாழ்குன்னத் தூர்புதூர்விக்கினேச் சுரனைச், சாற்றியற்சோலைச் சிரவைராமானந் தக்குருசேவடி யன்பிற், போற்றியற்கந்த சாமியேத்திடுபாப் புகல்பவர்புகலருட் பொருளே. (௧௨)

முற்றிற்று.

தெய்வமே துணை.

13

உ

குருவே துணை.

சீதேவி பூதேவி சமேத

ஸ்ரீ நாராயணமூர்த்தி தோத்திரப் பதிகம்.

காப்பு — வெண்பா.

ஊற்றிசைமெய் யன்பர்குன்னத் தூர்புதூர்க் கோயிலின்கண்
போற்றிசையார் சீதேவி பூதேவி — யேற்றிசையார்
நாரா யணமூர்த்தி நற்பதிகக் காப்பு மறைப்
பாரா யணர்பொற் பதம்.

எண்சீர் விருத்தங்கள்.

திங்களானனங் கோகனதம்போற் சிறந்தவாய்கரந்
தாள்விழியுந்தி, மங்களாகர மெய்கொடுபுள்மேல் வந்தணைந்
தருள் வாழ்வளித்தருள்வாய், கொங்களாவிய மதுமலர்ப்
பொதும்பர்க் குன்னத்தூர்புதூர்க் கோயிலின்வாழ்வாய்,
நங்களன்னைசீ தேவிபூதேவி நாப்பண்மேவுநா ராயணத்
தேவே. (க)

பாடிவந்தனை புரிந்தனனுண்மைப் பத்தியோர்கிலன் பாவியேன்றன்னைத், தேடிவந்தருள் செய்விடில்வேறோர் திக்கிலேன்புரி செயல்பிறிதறியேன், கூடியன்பினிற் பாடல் களாடல் குயிற்றுவார் குன்னத் தூர்புதூர்க்கோயில், நாடி நின்றசீ தேவிபூதேவி நாப்பண்மேவுநா ராயணத்தேவே. (உ)

வேட்டையைம்புல மயக்கினில்வீழ்த்தும் வேதனெண் கர விதியொழித்தின்ப, வீட்டைக்காட்டிடு நான்மறை யொழுக்க விதியையென்சிரம் பதியவைத்தருள்வாய், கூட்டையோம்புறு தன்பராக்கிடுவான் குன்னத்தூர்புதூர்க் கோயில்கொண்டருண்மெய், நாட்டைநல்குசீ தேவிபூதேவி நாப்பண்மேவுநா ராயணத்தேவே. (ந)

வானமேலர சாள்பவன்முடிமேல் வைத்தமாமணி முடியினுமுனதன், பானமேலவர் தாளுதிர்பொடிமே லாவ தென்றறி யாதவத்துழன்றேன், கூன*லம்புலி †தைவருஞ் சோலைக் குன்னத்தூர்புதூர்க் குளி‡ரலர்திலக, §நான மேற்றசீ தேவிபூதேவி நாப்பண்மேவுநா ராயணத்தேவே.

சீலமிக்கநான் மறையுடனாழ்வார் திவ்வியப்பிர பந்த மொடானை, யோலமேற்றகா தெனதுபுன்சொல்லு முவக் குமென்றுளத் துறுதிமிக்குற்றேன், கோலமொத்திடக் குணத்திலுஞ்சிறந்தார் குன்னத்தூர்புதூர்க் கோயில் கொண்டன்பால், ஞாலமேத்துசீ தேவிபூதேவி நாப்பண் மேவுநா ராயணத்தேவே. (ரு)

---

*அம்புலி—சந்திரன், †தைவரல்—தடவல், ‡அலர்—சலம், §நானம்–அபிடேகம், நானம்–கத்தூரி, திலகம்–பொட்டு.

பற்றிடுங்கர நேமியைச் சங்கைப் பார்கிலென்றனைப் பற்றிடும்பவங்கள், அற்றிடுஞ்சுக முற்றிடுமென்றுள் ளார்வ மோங்கினன் சோர்வகற்றிடுவாய், கொற்றியானினஞ் சுற்றிடுமுல்லைக் குன்னத்தூர்புதூர்க் கோயிலுற்றோங்கி, நற்றிருச்செய்சீ தேவிபூதேவி நாப்பண்மேவுநா ராயணத் தேவே. (சு)

கண்ணனேயென்றன் கண்ணகத்தென்றுங் கலந்து நின்றருள் கரியமாணிக்க, வண்ணனேயுன்மெய் மகிமை யெப்பொழுதும் வழுத்திநாத்தழு தழுத்திடவைப்பாய், *கொண்ணனேயமெய்த் தொண்டர்களுவப்பக் குன்னத் தூர்புதூர்க் கோயிலின் †மாட்சி, நண்ணனேகசீ தேவி பூதேவி நாப்பண்மேவுநா ராயணத்தேவே. (எ)

பாவினேன்றமட் டுன்புகழ்பாடிப் பரிமளத்துள வந் துணர்பதமேல், தூவினேன்றயை பொழிவிழியரியச் சுத முகுந்தமா தவவெனவுவந்து, கூவினேன்முறை செவி யடைந்திலதோ குன்னத்தூர்புதூர்க் கோயிலொத்தடி யேன், நாவினேன்றசீ தேவிபூதேவி நாப்பண்மேவுநா ராயணத்தேவே. (அ)

பயந்தழைத்தொளிப் பினுமெனதுயிரைப் பற்றவே யெதிர் பார்க்கின்றுனியமன், வியந்தழைத்துநான் போற் றினுமெனைநீ விரும்பிடாவிடில் வேறுதிக்கறியேன், ‡குயந் தழைத்தகை மறையவர்வாழ்த்துங் குன்னத்தூர்புதூர்க் கோயிலிற்கருணை, நயந்தழைத்தசீ தேவிபூதேவி நாப்பண் மேவுநா ராயணத்தேவே. (கூ)

---

*நல்நேயம்கொள்—எனப்பிரிக்க, நேயம்—அன்பு, †மாட்சி அநேகம் நண்ணு—எனக்கூட்டுக, ‡குயம்—தருப்பை,

பூமகட்கிசை தருமுக §நிரைபோற் புனிதமிக்கவற் புதவருட்சிறப்பார், மாமகத்துவத் திருப்பதியனைத்தும் வணங்கிவாழ்த்தருண் மான்மியந்தருவாய், கோமளத்திரு மேனியெம்பரனே குன்னத்தூர்புதூர்க் கோயில்கொளனந்த, நாமநாதசீ தேவிபூதேவி நாப்பண்மேவுநா ராயணத் தேவே. (கo)

கட்டவாவடி வேரறுத்துன்பொற் கமலமாமலர்க் கழலகண்டத்துட், பட்டவாழ்வனைத் தும்பெறுமகிமைப் பரமபாகவ தர்க்கருளின்பங், கொட்டவாவின்பஞ் சொட்டிடவாவா குன்னத்தூர்புதூர்க் கோயிலையுவந்து, நட்டவா மெய்ச்சீ தேவிபூதேவி நாப்பண்மேவுநா ராயணத்தேவே.

கும்பிடுந்தவத் தொண்டர்நெஞ்சகம்போற் குலவுசீர்க் குன்னத் தூர்புதூர்க்கோயில், நம்பிடும்மெய்ச்சீ தேவி பூதேவி நாப்பண்மேவுநா ராயணத்தேவை, வம்பிடும்பொழிற் சிரவையோங்குமிரா மானந்தக்குரு மலரடியுள்ளத், தெம்பிடுங்கந்த சாமிவாழ்த்திடுந்தோத் திரங்களோதுவார் தீவினையிலரே.

எழுசீர் விருத்தங்கள்.

மணங்கமழ்ந்தவிர்கா யாமலர்ச்சோதி வடிவமும் புன்னகைவாயும், இணங்கருள்விழியும் படையிசைகரமுமிலங்குபீதாம்பர விடையும், குணங்கமழ்பதமுந் துலங்க வந்தருள்வாய் குளிர்குன்னத் தூர்புதூர்க் கோயில், வணங்கலந்தவிர்சீ தேவிபூதேவி மருவுநா ராயணமணியே. (க)

§ நிரை — வரிசை.

செங்களத்திகலோர் மிசைமறக்கருணை செலுத்துமுன் சேவடித் துணைமேல், கொங்களவலர்தண் டுழாய்பொழிந்தன்பிற் குளிர்தமிழ்கொடுதுதிப் பேற்கு, விங்களமாயை யொழித்திலைமுறையோ வியன்குன்னத்தூர்புதூர்க் கோயில், மங்களநிறைசீ தேவிபூதேவி மருவுநாராயண மணியே. (உ)

உலர்தருத்தளிர்ப்ப விலங்குபுள்ளினங்க ளுயர்பரசுகமிசைந் துருக, வலர்தருமமுத வதரபானஞ்செய் தருளிசைவேணுகா னத்தாற், புலர்ந்தவென்னுயிர்மெய் குளிர்ந்திட விருந்து புரிகுன்னத் தூர்புதூர்க் கோயில், மலர்தரத்திகழ்சீ தேவிபூதேவி மருவுநாராயண மணியே. (ங)

சதித்திடுமாயா மயக்கொழிந்துலகிற் சாருமானிடரெலா முனையுட், பதித்திடும்பத்தி மேலிடப்புரிமெய்ப் பண்பிசைவிதியைநின் னுந்தி, உதித்திடுசுதனை யமைத்திடச் செய்வா யுயர்குன்னத் தூர்புதூர்க்கோயின், மதித்திடுஞ் சுதைச்சீ தேவிபூதேவி மருவுநாராயண மணியே. (ச)

கண்ணுலவியன்மெய்க் காட்சியிலெனது கருத்தமைத் துள்ளுறக் கலந்து, புண்ணுலவாக்கை யுயிர்தொடாவின்ப பூரணத்தமைந்திடப் புரிவாய், விண்ணுலகினரெய் தருஞ் சுகமனிதர் மேவிடக்குன்னத்தூர் புதூர்க்கண், மண்ணுலகிசைசீ தேவிபூதேவி மருவுநாராயண மணியே. (ரு)

உயங்குநூலிடையார் மண்ணுடன்பொன்னென் றுருப்புனைந்தலைக்குமே டணயான், மயங்குமென்மனத்தின் மீதுகாளிங்கன் மணிமுடிமிசைநடித் தருளும், வியங்

குலாவியபொன் னடியமைத்தருள்வாய் மிளிர்குன்னத் தூர்புதூர்க் கோயில், வயங்குமெய்ப்புகழ்ச்சீ தேவிபூதேவி மருவுநாராயண மணியே. (௬)

அன்னியம்பெறுமைம் புலவிருந்தாகி யரைக்கணத் தொழிதரு முகில்சார், மின்னியற்போகச் சேற்றிலாழ்ந் தயரும் வீணனேமீட்டுநின் கமல, பொன்னியற்பாத விட்ட மைத்திடுவாய் புகழ்க்குன்னத்தூர்புதூர்க் கோயில், வன்னி யம்பொலிசீ தேவிபூதேவி மருவுநாராயண மணியே. (௭)

சுரபந்தவிசைந்தே னமிழ்தியலின்பச் சுவைகொளாழ் வார்கள்வாய் மலர்ந்த, பிரபந்தமன்பிற் சாற்றியுள்ளுருகும் பெருந்தவப்பயனெனக் கருள்வாய், நரபந்தவுடன்மெய்ப் பெரும்பயன்பொருந்த நற்குன்னத்தூர்க் கோயில், வரபந் தமிசைசீ தேவிபூதேவி மருவுநாராயண மணியே. (௮)

பொன்னிசைநலத்தா லயப்பணியாதி புரிந்துவேதா கமம் புராணம், பன்னிசையனந்த கோடிகளாகப் பரந்த நின்கீர்த்தியாம் பூவை, என்னிசைநார்வாக் காற்றொடுத் தனிய விசைகுன்னத்தூர்புதூர்க் கோயின், மன்னிசை யருட்சீ தேவிபூதேவி மருவுநாராயண மணியே. (௯)

ஆனநாளனைத்தும் வீண்பழிபலத்துக் கானதல்லா தெனக் குதவும், ஞானநாளாயிற் றில்லைநீயருளால் நல்குதி யுரோகணி யோணம், ஆனநாளேகா தசிசிறப்பிசைய வமைகுன்னத்தூர்புதூர்க் கோயில், மானநாள்புரிசீ தேவி பூதேவி மருவுநாராயண மணியே. (௧0)

எற்றமிக்கமைரா மாநுசபத்த ரிசைக்குன்னத்தூர் புதூர்க் கோயில், மாற்றவிர்மெய்ச்சீ தேவிபூதேவி மருவு நாராயண மணியைச், சாற்றவிரிராமா னந்ததேசிகன் மெய்த் தாசனுங்கந்தசா மிச்சேய், போற்றனிப்பதிக மேத் தெடுத்திடும்வாய் பொருந்துவார்திருந்துமா தவரே. (கக)

முற்றிற்று.

சந்தக் கவி.

தனதனதன்னத் தானதானன — தனதானா.

புயலவிர்மின்னற் போலும்நூலிடை
யணிபொலியன்னப் பேடுநேர்நடை
பொறிநிறைமஞ்ஞைச் சாயலேபெறு மடமாதர்
புகன்மொழிதன்னிற் காலவேலென
வெருளமைகண்ணிற் பூணிலாவிய
புளகிதகொம்மைச் சூசுகாதியின் மருளாதே
இயலிசைவெண்மைத் தாயநாடக
வகைகொடுனுண்மைச் சீர்கள்யாவையும்
மிடையறவெண்ணிப் பாடியாடிடு பணியீவான்
எனதிருகண்முற் றேவிமாரொடு
ககவிறைவென்னிற் கூடியோர்தின
மிணையடிசென்னிப் பால்விராவிட வணிவாயே
தயவறுபுன்மைக் கோரதீவினை
யினரவைமுன்மெய்ச் சேலையீர்தரு
ததியுளமுன்னிச் சோர்துரோபதை விழிநேரே

தரிசனமன்னித் தூயபேரருள்
புரிமணிவண்ணத் தேவநாயக
தபனனின்மின்னற் கூடுநேமிவெள் வளையானே
அயன்விதிவன்னத் தாகபோகமெய்
யெனமிகவின்னற் கூடிவாடுத
லறவருள்செம்மைக் காரணகர குருநாதா
அதிவிதநன்மைக் கேதுவாமரி
பசனைசெய்திண்மைக் காதன்மேவின
ரணிதிகழ்குன்னத் தூர்புதூர்வளர் பெருமாளே.

வாழிவிருத்தம்.

கோலநீள்குன்னத் தூர்புதூர்வாழி குஞ்சரமுகன்றளி வாழி, சீலமிக்கமைசீ தேவிபூதேவி திளைக்கும்நாராயணன் வாழி, நோலணிப்பாகவதர்களிராமா நுசபத்தசனசபை வாழி, சாலநன்மைகளாம் பொருளெலாமின்பந் தழைந்து பல்லாண்டுவா ழியவே.

தெய்வமே துணை.

உ

ஸ்ரீமந் நாராயணாயநம:

திருவாமாத்தூர் கௌமார மடாலயம்

ஸ்ரீ தி. செ. முருகதாச பிள்ளை அவர்களியற்றிய

ஸ்ரீ நாராயணமூர்த்திப் பதிகம்.

காப்பு — வெண்பா.

கோப்பயின்மெய்க் காட்சி குலவுகுன்னத் தூர்புதூர்
பூப்பதுமச் சீதேவி பூதேவி — நாப்பணவிர்
நாரா யணமூர்த்தி நற்பதிகக் காப்படியார்
பூராயப் பாதப் புணை.

இரட்டையாசிரிய விருத்தம்.

உன்பெயர்க ளாயிரமி ருக்கவொன் றிணையேனும்
உள்ளன்பொ டோதுகில்லேன்
உலகில்மத வாதமொடு புணைகலைகுறித்துநித
முறுவாதொ ழிக்கநினைவேன்

என்பெயரி சைத்தழைத் திட்டதாய் தந்தையர்க
ளெத்தனையெ னத்தேர்கிலேன்
எவ்வாறுன் மெய்யருள்கொ டுய்வேனெனக்கான
இன்னருள்பு ரிந்தருளுவாய்
தன்பெயரை யேமறையெ னப்பகர்ந் திடுமாறு
தண்டனைமி கப்புரிந்தோன்
தன்மனைத் தானாடி ருந்துவந் தவனுயிர்
தடிந்துசிறு தொண்டனுய்யப்
பொன்பெயர்த் திருமாதொ டன்றுவந் தருள்பசும்
புயலனைய மேனியானே
பொன்னுலக விண்ணவரும் நண்ணுகுன் னத்தூர்
புதூர்நார ணக்கடவுளே. (௬)

சீலமுறு திருமழிசை யாழ்வா ருடன்சொல்சூத்
திரதம்ப திப்பெயர்கொள்வார்
செம்பொன்மய லறவேத விர்ந்தருட் பத்திமை
செறிந்தருள்பொ ருந்தினரெக்
காலமும தேவிழைந் தெய்த்தேனின் மெய்யருட்
காட்சிபெற் றுய்வதென்றோ
கருணைமலி திருவுளமி ரங்கிநீ யேயெனைக்
காத்திடின லாதுய்கிலேன்
பாலமுத ளிக்கவென வாலமுள டக்குதன
பாரமுடன் வந்தவசுரப்
பாதகியொர் பூதகித னுயிருண்ட வாய்கொண்ட
பாலகோ பால மேகம்

போலவிரு நீலநற் கோலனே சீலனே
போற்றுமைம் படைகொள்மாலே
பொன்னுலக விண்ணவரும் நண்ணுகுன் னத்தூர்
புதூர்நார ணக்கடவுளே. (௨)

பொருவிலுன் றிருநாம மொன்றுபெய ராப்பெற்ற
புத்திரன் றனையழைத்த
புண்ணியத் தாலசா மிளன்முன்பு புரிகொடும்
புரைதவிர்ந் துயநாடினாய்
பொருளறிகி லாதுமா றிச்சொல்வன வேடனவிர்
புற்றெருவி முனிவனானான்
புந்தியிலி னைக்கருதி லுன்பெயரெ வகையினும்
புகலுயர் வென்றறிந்தேன்
கருநிறத் தேனமுட னைமீ னாகியும்
காசினியு யப்புரிந்தாய்
கான்முனைப் படிவிலுர லொடுதவமு நாளினும்
கருமருதி ரண்டடர்த்தாய்
பொருவேல்பு னைந்தகர முருகோன் மணக்கவிரு
பூவையரை யன்றளித்தாய்
பொன்னுலக விண்ணவரும் நண்ணுகுன் னத்தூர்
புதூர்நார ணக்கடவுளே. (௩)

குந்திதரு மைந்தரெனு மைவர்களில் நடுவாக்
குலாவுகாண் டீபனந்நாள்
கொற்றமமு வாளியிட மத்திரம் பெறுவது
குறித்தேகு காற்பூசைசெய்

சந்திகூ டிடுபொழு தருச்சனை செய் கெனமுழங்
தாளளித் தானபின்போய்த்
தண்கயிலை யரன்முடியி லம்மலரி ருந்தசெயல்
தனையுணர்த் தினையென்பதால்
அந்திவான் பிறைசூடு மண்ணலுட னீயும்வே
றல்லவெனல் நிசமாகுமால்
அரன்வேறு நீவேறெ னுவாதி யற்றனருன்
அருளின்றி யுணர்வுறுவரோ
புந்திமகிழ் வுறவருட் செந்திருவொ டென்னெதிர்
பொருந்தியாட் கொள்ளநினைவாய்
பொன்னுலக விண்ணவரும் நண்ணுகுன்னத்தூர்
புதூர்நார ணக்கடவுளே. (ச)

துன்னிடர் தவிர்க்குமுன் பன்னிருதி ருப்பெயர்கள்
சொல்லித்து திக்கவறியேன்
தொண்டுபுரி யும்புனிதர் மண்டுபேரவையினிடை
தோய்ந்துமகி ழுந்தவமிலேன்
உன்னிடுந் தோறுமிக மன்னுவகை தருமுன்ற
னுருவைநா டிக்களிகொளேன்
உலகினிடை நிலவுபல பொருள்களைவி ரும்பிநித
உறுகணுற் றுத்தளர்ந்தேன்
மின்னெழிற் சங்காழி புனையுமிரு கையனே
விண்ணவரு யத்திருப்பால்
வேலைவரு மமுதையெழில் மோகினிப் படிவா
விளங்கியுண நல்குமிறைவா

புன்னிணமு னுந்தகுவர் தங்குலம றச்செயும்
புருடோத்த மாமுகுந்தா
பொன்னுலக விண்ணவரும் நண்ணுகுன் னத்தூர்
புதூர்நார ணக்கடவுளே. (ரு)

மணமலர்க் குழல்மனைவி மகனுடனு வப்போடு
வாள்கொண்ட றுக்கவிசைவாய்
வைகியுட லினில்வலப் பாலுனக் காவரிய
மருவிடப் பாற்கணின்றும்
அணவியபு னற்கண்டு னக்கதுவு மொவ்வாத
அவலமுற் றேங்கியதெனு
ஆதரமி குத்துநுவல் சீர்மயூ ரத்துவச
னன்பெனக் கமையுங்கொலோ
கணபணக் கொடியனது வஞ்சகத் தாற்கடுங்
கானிடைக் காரிகையொடுங்
கவினுமைந் தன்பர்மகிழ் வுறஓரிலை யுண்டுமுனி
கண்கலங் கப்புரிந்தாய்
புணரியுடை யாம்புவித் தாயுமர விந்தம்வரு
பூவையும்வி ரும்புமழகா
பொன்னுலக விண்ணவரும் நண்ணுகுன் னத்தூர்
புதூர்நார ணக்கடவுளே. (சா)

கொன்றுதின் றிடுமிழிகு ணம்கொளுந் தீயருள்
குலவுநெறி கொள்ளவேண்டும்
கூறுமத வாதர்பொரு ளொன்றெனும் சமரசக்
கொள்கை யின ராதல்வேண்டும்

என்றும்வரு மிரவலர்க் கில்லையென் றுதுதவு
மேற்றநிலை வேண்டுமன்பால்
இரவுபக லுனைநாடி யின்பமுற வேண்டும்நிற்
கிவையுதவ முடியாததோ
கன்றுருக் கொடுவந்த கொடியனைவி ளாவிலுறு
கனிவிழவெ றிந்தசிறுவா
காணுமாச் சியருறியில் வைத்ததயிர் வெண்ணெய்பால்
களவாடி யுண்டுவந்தாய்
பொன்றுதலு டன்பிறப் பறுபதமெ யன்பர்கள்
பொருந்தவருள் புரியுமாலே
பொன்னுலக விண்ணவரும் நண்ணுகுன் னத்தூர்
புதூர்நார ணக்கடவுளே. (எ)

காரிதன் றினமான சனிநாளு னைப்பரவல்
கசடெனல்வி ளக்கிமேலாக்
கவினுறுபு தன்றின முனக்குரிய தெனவுலகர்
கைக்கொளச் செயல்விழைந்தேன்
காரிமா றன்சொலுந் தமிழ்மறைப் பொருளினைக்
கருதியுனை யேத்தவறியேன்
கடையனே னுக்கருள ளித்தாளி லென்றுமிக்
காசினிக் குயர்வுண்டுகொல்
கூரிலகு மாழிவிட் டம்பரீடன்றவம்
கோதுறச் செயல்விழைந்த
கோபமுறு துருவாச முனிகலங் கச்செய்த
கொண்டல்மே னிக்கடவுளே

33

போரிழைத் தவுணரைக் காய்ந்தமரரைக்காத்த
புனிதனே பொற்கலையனே
பொன்னுலக விண்ணவரும் நண்ணுகுன் னத்தூர்
புதூர்நார ணக்கடவுளே. (அ)

எந்தவித மொழியுமந் திரமாகும் வழிபா
டியற்றவெவ் வுருவுமாகும்
ஏற்றமுறு முள்ளன் புடன்புரியி லென்பதனை
இசைசில்லு பில்லுவென்சொல்
முந்தறுவல் கன்னியரு மெருமையின் கொம்பினிலுனை
முன்னுபூ சனைசெய்தானும்
முதிரருள்கொள் காதைகொடுணர்ந்தேன வன்பினை
முயங்கிடப் பெறுவேன்கொலோ
புந்தியினி னைந்தபடி வந்தருள்பு ரிந்திடும்
பூரண நாரணவென்
பொறியுடைப் பகவனே பொறிமருவு மார்பனே
பொறியரவி லறிதுயில்செய்வாய்
பொங்கவிர்த ருப்பொழில்கொள் வில்லிபுத்தூரில்வரு
பூவைநுவல் பாவையேற்றாய்
பொன்னுலக விண்ணவரும் நண்ணுகுன் னத்தூர்
புதூர்நார ணக்கடவுளே. (கூ)

கற்றறி கி லேன்பல்கலை கற்றபெரி யோர்கள்வாய்
கழறியப டிக்குநடவேன்
கருமபவ வல்வினைக் கட்டுண்டு தட்டுண்டு
கட்டமிக் குத்தளர்ந்தேன்

சிற்றறிவி னேன்செய்த குற்றமினை யேல்பெற்ற
சேய்செய்பிழை தாய்நினைவளோ
தீனரக்ஷகமோன ஞானவித் தகபோத
திருவடிக் கபயமருள்வாய்
கொற்றமலி பசுவினந் தளராத படியேழு
கொண்டல்மழை பெய்தநாளிற்
குடையெனக் குன்றெடுத் துக்கவித் துக்காத்த
கோவிந்த தாமோதரா
புற்றரவி னிற்கொடிய காளிங்கன் மிசைநடம்
புரிகுழக னேயழகனே
பொன்னுலக விண்ணவரும் நண்ணுகுன் னத்தூர்
புதூர்நார ணக்கடவுளே. (௧௦)

தண்டபா ணிக்குரவ னிடமுனெழு நூறுபொன்
தரவிசைந் தொப்பமிட்டுத்
தாட்டிகமு டன்றந்த சீட்டுமார் பிற்குலவு
தண்டாம ரைக்கிழத்தி
வண்டமிழ்த் துதிகூறில் ஒண்டகைப் பொருள்மிக
வழங்குவே னென்றியற்பா
மாலைபெற் றீயாத வாய்மையும் பொய்பட
மறந்தவரெ னத்திகழ்ந்தீர்
விண்டநுஞ் சொற்படியொர் சிறிதேனும் யாம்பெற
விரைந்தளித் தருள்நினைவாய்
மேதைபெறு கீதையினை வில்விசைய னுணர்வுற
விளம்பியற நெறிநிறுவினய்

புண்டரீ கப்பிரம னைத்தந்த வுந்தியாய்
புருடோத்த மாவைகுந்தா
பொன்னுலக விண்ணவரும் நண்ணுகுன் னத்தூர்
புதூர்நார ணக்கடவுளே. (கக)

நின்மகன் கைகொடுப டைத்திடப் பெற்றுணவு
நீதரப் பெறுமுயிர்களை
நேசியம தூதருமு ளஞ்சிடக் கொலைசெய்து
நிணமுண்டு வக்குநீசக்
கன்மனத் தீயருயர் தன்மநெறி பெறுதூய
கருணையின ராகியிந்தக்
காசினியி லவிர்தரச் செயல்விழைந் தேனுனது
கண்ணருள்பு ரிந்தருளுவாய்
பன்மதத் தவர்களும் விரும்பிடும் பலவருட்
படிவுகொண் டருள்செய்பரனே
பழிமொழிய தாந்திருட னென்றுரைத் தாலுமருள்
பாலித்தி டுங்கருணையாய்
பொன்மருவு மார்பனே தன்மநெறி பற்றியவிர்
புனிதர்பலர் மருவுமதனூற்
பொன்னுலக விண்ணவரும் நண்ணுகுன் னத்தூர்
புதூர்நார ணக்கடவுளே. (கஉ)

சந்தப்பஞ்சகம்.

தன்னத் தானதானன — தனதான

பொன்னைப் பூவைமார்களை மண்ணைத் தேடியேமிகு
புண்ணிற் கோலெனுமனம் நலிவேனோ

புன்மைத் தாயவூனுகர் கன்மத் தோரதோவிடு
புண்யத் தேகிலாவிடல் புரியேனோ
மின்னைப் போலுமாழிநல் வெண்மைத் தூயநீள்வளை
வின்முற் கோலம்யாவையு முறுமாறே
வெம்மைத் தீமைமாறிட என்முற் சேவைநீதரில்
விண்ணத் தோரில்மேலென மிளிர்வேனே
சொன்னத் தேவென்மாமகள் மர்ம்மத் தேகொள்வாய்துதி
சொன்மெய்ப் பாவலோர்புகழ் கழலோனே
சுண்ணச் சேறளாவிட முன்னர்க் கோதைசூடலர்
துன்னட் பாளனேதமிழ் நசையோனே
கொன்மற்றேளிராகவ னென்னப் போய்நிசாசரர்
கும்மைச் சாடும்வீறுறு புயமாலே
கொண்முச் சேரநீடிய தென்னைச் சோலைமேவிய
குன்னத்தூர்புதூருறை பெருமாளே.

தெய்வமே துணை.

உ

குருவே துணை.

ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்,

கௌமார மடாலயம்,

சிரவணபுரம்.

37

உ

குருவே துணை.

ஸ்ரீமத். கந்தசாமி சுவாமிகளியற்றிய

இகபரசாதன விளக்கம்.

காப்பு.

கட்டளைக் கலித்துறை.

சகத்துதிக் குங்குண மாதவ மானிடர் தாழ்வந்து
தகத்துதித் தேற்கு மிகபர சாதன சாரமென்புன்
அகத்துதித் தற்கிரா மானந்த நாத னடித்துணைகண்
மிகத்துதிக் கின்றன னன்கவிர்ந் தன்பின் விளக்கிடவே.

வசனம்.

இந்நூலுக்கு, இகபரசாதனம் என்னும் பெயரமைத்ததற்குக் காரணம் என்னை?

சிதாபாசத் தன்மையுள்ள ஆன்மா மலபரிபாகம் அடையத் துணையாகிநிற்கும் மாயைகன்ம சம்பந்தமுற்ற ஆபாச போகபாக்கியாநுபவ நிலையே இகமென்றும், அவற்றிலுள்ள மயக்க விகாரங்கள் நீங்கிய நின்மலாவத்தையிலமைந்த சித் அநுபவ நிலையே பரமென்றும் சொல்லப்படும்.

ஆன்மா சிதர்பாசத்தன்மையடைவதற்குக் காரணம் யாது?

அதன் இச்சையே காரணமாகும்.

அது எவற்ருல் எனிற் கூறுதும்.

அருவமாகிய ஞானத்திற்கும் உருவமாகிய கிரியைக்கும் திரியமுகமாய் அருவுருவத்தன்மைபெற்று இச்சையானது சுபாவம் என்னும் பெயரமைந்து பொதுநிலையில் விளங்கும். அது சொரூப ஞாஞநுபவ மாகிய சுத்த நிலையில் நின்றுள்ள பெரியோர்களது வாக்கியாமிர்தமாகிய கேள்வி விருந்தை ஆர்வமுடன் வினவுங்காலத்தில் தெளிவுமயமாகிய சித்துவிளக்க மமைந்து சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் அதாவது நிலைத்துநின்று சாதித்தலால் தன்மயமான சொரூபத் தன்மையடைகிறது.

ஆபாசத் தன்மையமையுங் காரணம் என்னை ?

நில்லாதவற்றை நிலையினவென்றுணரும் புல்லறிவாண்மையினருடன் கூடி, கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று சாதிக்கும் மலினவாதனைப் போதனைமயக்க வைரமுதிர்ந்து நித்தியமும் சுத்தமும் அருவமுமாகிய தன்மை நிலையை மறந்து அதன் எதிர்மறையாய் முன்னிலை படர்க்கையான மாயை கன்ம விகார விபரீதத்துடன் அநித்தியமும் அசுத்தமும் உருவமும் துன்பமும் வினைப்போகமும் பொருந்திநின்று வினையொழிந்தவுடன் மூர்க்கர்களின் நட்புப்போன்று விட்டொழியும் புவனபோக பந்தபாசத்தால் ஆபாசத் தன்மையடைகிறது.

இகபரசாதனம் என்றமையால் இவையல்லாத வேறு நிலைகளும் உண்டென்பது பெறப்படுமாலோ எனில் உண்டு. அதற்குக் கேவலம் என்று பெயர்.

அது எத்தனை வகைப்படும்?

இருட்கேவலமென்றும் அருட்கேவலமென்றும் இருவகைப்படும்.

இகபரசாதன அவஸ்தைகட்கும் கேவலாவஸ்தைகட்கும் உள்ள வேறுபாடு என்னை எனிற் கூறுதும்.

இகபரசாதனங்களானவை ஆன்மாக்கள் ஆகந்துகமலமான மாயை கன்மங்களாலமைந்த உடம்பினது சகாயத்தைக் கொண்டியற்றும் பாவம், புண்ணியம், தவம், ஞானமாதியவற்றின் துணைகொண்டு பொருந்தி அவற்றால் வரும் பயனை அநுபவிப்பது. கேவலாவஸ்தை சகசமலமாகி உயிரைத் தன்னுள் அடக்கி உயிரின் இச்சா ஞானக்கிரியைகளையும் அவற்றை மறைத்த தன்னையும் மறைத்து இருண்மயமாகி நிற்பது. அருட்கேவலமும் இத்தன்மை யமைந்து ஆதியந்தமற்ற அரும்பெருஞ்சோதிமயமாய் விளங்குவது.

இவற்றுள் இகபரசாதனங்கட் கேதுவாகிய சகலம் சுத்தம் என்ற அவஸ்தைகள் ஆதி அந்தம் என்னும் பகுப்பின்பாற்பட்ட காலதேச அளவைகட்குட்பட்டன வாகும். கேவலாவஸ்தையோ எனில் அநாதி என்னும் பெயருடன், தோன்றிய பொருள்கள் அனைத்தையும் தனக்குள் அடக்கி நிற்பதாகும்.

இவற்றுள் மலபரிபாகம் அமையப்பெற்ற ஆன்மாக்களின் இச்சை ஞானக்கிரியைகளை அருட் கேவலம் விழுங்கித் தன்மயமாக்கி, பராபரத்துடன் கூட்டும். இதுபோன்று இருட்கேவலத்தமைந்த ஆன்மாக்களையும் பரிபாகப்படுத்தும்.

அது எவ்வாறு என்னில்,

"காரிட்ட ஆணவக் கருவறையிலறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டிருந்த எமை" என்றபடி அநாதியாகிய சகசமல கேவலாந்தகாரத்தில் அழுந்திக்கிடந்த நம்மைப் பரிபாகப்படுத்தும்படி அகண்ட சச்சிதானந்த பரிபூரண இயற்கையின்பமாகியும், தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் எண்குணங்களைக்கொண்ட இறைவன் தனது இயற்கை விளக்கமாகிய திருவருட்சத்தியினுல் அண்டரண்டத்தையும், அதினின்றும் செயற்கை விளக்கமாகிய பரவிந்துபரநாதங்களால் அளவற்ற அண்டவகைகளையும், அவற்றினின்றும் மயக்கவிகாரமயமும், பிண்டமயமுமாகிய சராசரங்களையும், ஆன்மாக்களது பக்குவாநுசாரத்துக்கு ஏற்றமுறையில் அநந்தகோடி சக்திகளை உண்டாக்கிக் கூட்டுவித்து, தநுகரணபுவன போகங்களைக் காட்டுவித்து, மாயைகன்மங்களில் மாட்டுவித்து, புண்ணியபாவக் கயிற்ருலாட்டுவித்துப் பரிபாகப்படுத்தும்படி ஓட்டுவிக்கும் புவனவகைகள் பலவிதப்படினும் அவற்றுள் கன்மாநுபவமுறையில் தலைசிறந்து முதற்படிகளாய் விளங்குவன சுவர்க்கம், நரகம், மண்ணுலகம் என்னும் மூன்றுமேயாம். மற்றுள்ள பதவி புவனங்கள் அளவை கடந்த எல்லையில்லனவாய் விரிந்த நூல்களாலும் தொகையளவாலன்றி வகையளவால் ஓத முடிவுபெருதனவாய் விளங்கும்.

அவற்றுள் நாம் இங்கு எடுத்துக்கொண்ட புண்ணியம், பாவம், தவம் என்னும் மூவகை அநுபவங்

கட்கு உரித்தான, சுவர்க்கம், நரகம், சாலோகமாதிய உலகங்களின் இயல்பும், இவற்றிற்கு மூலகாரணமாய் நின்று, ஆன்மாக்களது பதிபுண்ணிய வழிபாடுகளைக் கொண்டருள சரத்திருமேனியமைந்த குருமூர்த்தங்களையும் அடியார்களையும் அசரத்திருமேனியமைந்த திருக்கோயில்களையும் தெய்வ வடிவங்களையும், தெய்விகத்தருக்களமைந்த தலங்களையும், புண்ணிய தீர்த்தங்களையும் வாய்ந்து தன்பாலமையும் பாக்கியம் பெற்ற ஆன்மவர்க்கங்கட்குவேண்டிய வேண்டியாங்கு காமியவின்பம் கதியின்பங்களையுதவும் தெய்விக கற்பகத் தருவைப்போன்று விளங்கும் மண்ணுலகவியல்பையும், அதன் கண்பத்திஞானச் செல்வம் நிரம்பிய பெரியோர் களால் புகழ்ந்து கொண்டாடும் பேரின்பவைப்பாய்ச் சிறந்துவிளங்கும் திருக்கோயிலின் இயல்பையும், வழிபடும் இயல்பையும் சிறிது விளக்குவோமாக.

சுவர்க்கவியல்பு.

அவற்றுள் பசுபுண்ணியப்பயனை ஆன்மாக்களுக்கு ஊட்டியொழிக்குந் தன்மையினதாயும், சுவர்னமயமானதாயும், அரிசந்தனம், சந்தானம், கற்பகம், பாரிசாதம், மந்தாரம் என்னும் பெயரமைந்து வாட்டமற்ற பரிமள மலர்களைக்கொண்ட பஞ்சதருக்களை வாய்ந்து, அதன் நிழலில் அமைந்தார்க்கு வேண்டிய போக வஸ்துக்களை நல்க வல்லதாயும், சிந்தாமணியாலும் காமதேனுவாலும் விரும்பிய திரவியங்களையும் உண்டி வகைகளையும் வழங்கும் தன்மையினதாயும் உள்ள சுவர்க்கலோகாநுபவமானது, உயிர்க்குறுதி பயக்கத்தக்க அன்பு அருள் என்னும் இருவகைச் சாதனங்களையும் மறந்து போக சக்தி அதிகார சக்திகளாகிய கன்மம், மாயைகளா லெழுப்பும் விகாரம் மயக்கம் பொங்கி அப்பதவிமோகத்

தால் மதிகலங்கி முதற்பாதகமான யாகம்புரியத்தொடங்கித் தடையாயினர்களுக்கிடையூறியற்றியும், கொன்று குவித்தும் வென்றுகளித்தும், மொய்ம்புறு மறிவை முற்று மற்றொழித்தே. ஐம்புலபோகத் தலைத்திரளார்க்கும், காமக்கடலைக் கரைபுரண்டிடச்செய் சேமச்சசிநேர் திலகவாணுதலார், புதுமதுச்சாரம் புசித்திடுந்தொறும் தொறும் முதுமயக்கிடல்போன் முறுக வளர்த்தலால், என்றுஞ்சதமென் றிருந்துதாமுயன்றே, அன்றுசெய் புண்ணிய மறுதிபெற்றிடுதலும், கால தத்துவமாங் கடவுளன்னவர்தம், கோலமற்றிடக்கைக் கொண்டுமுன்னவர்கொல், யாகப்பரிகளினங்களாய்த்தகை, ஆகப்பரிசிலளித்திடுந்தகைத்தால், நனவினிலமரரா நண்ணிய செயலெலாம், கனவினிற்கடையாய்க் கவிழ்ந்தொழிவதுவே, இத்திறந்தன்னுலிமையவர் வாழ்வினில், எத்திற வின்பமும் இன்றின்றென்றே.

ஆமெனத் தொண்டரடிப் பொடியாழ்வார்
தேமெனம் புயமாந்திருவாய் மலரில்
பச்சைமா மலைநேர் பாசுர மருந்தளித்து
இச்சைமா லடிக்கண்ணிசைய வைத்தனரே.

அது வருமாறு.

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிரயான்போய் இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும்வேண்டேன் அரங்கமாநகருளானே.

துரியங்கடந்த பரஞானத் தொண்டர் தாள்தூளிமுடிப்
பிரியஞ்சடவகித் தப்புலவிச்சைப் பிராந்தியினுல்
பரியங்கனந்த மிரக்கமின் றிக்கொன்று பாவமிக
விரியிந்திரன்பதம் வேண்டிலம் வேண்டிலம் வேண்டிலமே.

இன்னும் விரிக்கிற் பெருகுமென்க.

நரகவியல்பு.

பிறப்பிறப் புடைய ராயிடை யினும்பல் பிணிபயந் தணிவில்கா மாதி, உறப்படு தலின்வா னவர்க்கு மற்றென்னை யுளசுகம்தேவின்மா னிடத்தின், சிறப்பிவை யென்றுற், குறுக்கியோ னிகளின் றீமையுங் கொடியர்வீழ் நிரயத், தறப்பெருந் துயரு முரைப்பதென் பிறப்பூ டாதலாற் றீதலா திலேயே.

ஆராவின்பமென்று அரும்பெயர் பெறினும் வாரா வல்வினைவருவிக்கும் தன்மையுள்ளதென்றும் ஊன்றி நோக்குமிடத்து, துன்பமேயன்றி இன்பமென்பது சிறிதும் இல்லை என்றும், மேன்மையுள்ள ஊர்த்துவ யோனிகளாய தேவமானிட கதிகளையே அறிவிற்சிறந்த தீர்க்கவிவேவிகள் மதித்துரைக்கத் துணியாராயின், குறுக்கியோனிகளிற் பிறந்து தமது முயற்சியாகார மென்பதொன்றின்றி, தெய்வகதியாய் ஏற்படும் நியதியாகாரத்தை எதிர்நோக்கியுழலும் விலங்குகள் அடையும் துன்பங்களை இரக்கமின்றி எவ்வகையில் வருணிப்பதோ?

கோலத்தால் மானிடராய், குணங்களால் கானிடராய் சாஸ்திர வாசனை வீசாத மலையடுத்த வனப்பிரதேசங்களில் காட்டுமிராண்டிகளாய்த் திரிந்து, பகுத்தறிவு குறிப்பறிவு மானம் சீலம் ஒழுக்கம் ஆதிய குணங்களில்லாமையால் மனிதர்கள் எனவும் போகாது, நான்குகால் நான்றவால் குளம்பு திரண்ட நகங்கள் பக்கவிழிகள் குறுக்கு வளர்ச்சியாதிய கோலங்க ளின்மையின் விலங்குகள் என்னவும் சாலாது, அண்டசத்தோற்றம் ஆகாயத்துலவல் தருக்களி லிருத்தலாதிய செயல்களில்லாமையால் பறவைகளென்

னவும்படாது அடி இடி குத்து வெட்டு கொல் என்னும் கொடுஞ்சொற் கிளர்ச்சியும் குரூர கன்மங்களுமே பயின்று குற்றமே குணமெனத் துணிந்து புரிந்துவாழும் தன்மையால், கிராதர், கொலைஞர், தீயர், பாவ மூர்த்திகள் என்பனவாதிய குலப்பெயர்களைக்கொண்டு விளங்கிய பாவிகள் ஏதோ தங்களால் அபுத்தி பூர்வமாகப் புரிந்த புண்ணிய கன்மத்தாலோ, தவஞான விளக்க மிகுந்த பெரியோர்களது தரிசன பரிசன விசேடத்தாலோ நாட்டினிடத்தமைந்த மானிடர்களுள் பொருந்தும் பாக்கியம் வாய்க்கப்பெற்றிருந்தும் "கழாக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர் குழாத்துள் பேதைபுகல்" என்ற மறைமொழிக்கிலக்கியமாய், குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்வது போல் சும்மா தின்று துயின்று திரியும் அளவில் நில்லாராய், தெய்வ வழிபாடியற்றி விழாக்கொண்டாடத் துணிந்து கிராம தேவதை குலதெய்வம் என்றமைத்து தமது முன்னோர்களால் விரதாநுஷ்டான நியம பத்தி சிரத்தையுடன் "நோன்பென்பது கொன்றுதின்னாமை" என்னும் மூதாட்டியின் அமுத வாக்கியத்தை, தம்மைப்போன்று சண்டாள சாதியினரும் கொண்டாடி ஜீவகாருண்ணிய நெறியிலமையும்படி அபிடேகம் அலங்காரம் ஆராதனைகளைச் சிறப்புறப் புரிந்தும் பாற்பொங்கல் பரிமள நிவேத்திய வர்க்கங்களை மிகுதியாகச் சமைத்து, பிணமருந்தும் நாயனைய சண்டிமாந்தர்கள் வாயிலும் தெய்வப்பிரசாதமான மணமருந்து போன்ற ஆகாரம் பானவகைகளை உண்பித்து மங்கள சாதனங்களான சந்தனம் தாம்பூலம் புஷ்பமாலைகள் விபூதி குங்குமங்கள் வழங்கி உவகையுடன் தெய்வத்தை வணங்கி வாழ்த்திப் பரவசமடையப்பண்ணிய கண்ணிய புண்ணிய சுபதினத்தை எதிர்மறையான அபதினமாக்கி

ஆடு கோழி எருமையாதிய மிருக வர்க்கங்களைப் பலியிட்டு அவைகள் தாங்கமுடியாத பிராணபத்தால் தெய்வத்தினிடம் முறையிடும் அபயக்குரலையும் திடுக்கிட்டரற்றும் அபாயக்குரலையும் கேட்டும் ஈரம் இரக்கமின்றி அக்கொலைப்பாதகக் கோரணிக்காட்சியைக்கண்ட களிப்பாலும் மதுமாமிசங்களை உண்ட களிப்பாலும் அவற்றின் இரத்தக் கவிச்சுகளை மேலே கொண்ட குளிப்பாலும், செக்கொலியனைய கெக்கலி நகையால் திக்கொடு வானம் திடுக்கிட வரற்றி மகிழ்ந்து தமது பஞ்ச மகா பாதகச் செயல்களே செய்வதற்கு எளியனவும் அநுபவித்தற்கு இனியனவும் கலிபுருடனுக்கு உவப்பளிப்பனவும் ஆகும் என்பதாகப் போதித்தும், மெய்யென நம்பும் இளமதியாளரைப் பேதித்தும், இணங்காதவர்களை வாதித்தும், இடையூறு புரிந்து சாதித்தும், மானிடர்களை மிருகங்களாக்கியும், கோயில்களைப் பிணக்காடாக்கியும், தெய்வங்களைப் பேய்களாக்கியும், தங்கள் வயிற்றை இடுகாடாக்கியும், நகரங்களைத் தாம் பூர்வ ஜென்மத்தில் வசித்த வேடச்சேரிகளாக்கியும், இக்காலத்திற்கு, சத்தியம், தவம் தானம் இரக்கம் சாந்தம் ஆஸ்திகம் ஆதியன பொருத்தமற்றதும் அருத்தமற்றதும் ஆகுமென்றும், வம்பர்க்கு வாய்த்த கலியுக தேவதையால் தூண்டப்படும் இயல்புடைய சங்கற்ப விகற்பங்களே நாம் செய்யத்தகுந்த தருமங்களென்றும் ஆகம சாஸ்திர புராணங்கள் யாவும் இதற்குமுன் இறந்தொழிந்த யுகங்களில் ஏற்படுத்திய நீதிகளும் கதைகளுமாகுமென்றும் அந்த சனாதன புராதன கொள்கைகள் அனைத்தும் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால, வகையினானே" என்னும் சூத்திரவிதிப்படி தள்ளிப் புறக்கணித்து எள்ளி நகையாடுதற்கு உரியனவும் என்பர்.

இவர்கள் சொல்வது உண்மையாயின் இவர்கள் பிறவிதோறும் சென்று கண்டனை தண்டனையடையப் புரியும் இயமலோக சட்டமும், மாழ்கி மூழ்கி அழுந்தி எழுந்துவந்த நரகங்களுமன்றோ மாற்றியமைத்திருக்க வேண்டும். இவர்களுக்குச் சட்ட நிரூபண சபையாரா லும் மரியாதை கொடுத்தால் அங்கும் தமது ஆக்கினை யைச் செலுத்தக் குறைந்தவர்களன்றே. அதுதான் இல்லையே? அங்கு யுக தருமங்களால் சிதைவுறுது என்றும் ஒரு தன்மைத்தாய் விளங்கும் தெய்வநீதி யன்றோ நடக்கின்றது. இந்த, சும்பர்களது வம்பமைந்த ஜம்பமும் டம்பமும் செல்லாததாகுமென்பதை நன்கு உணரவேண்டும்.

வேட்டைக்குருவி விலங்குகள் போன்று தாம் அடையும் நரகலோகம் நிரம்பிச் சிறப்படையும்வண்ணம் படை திரட்டிச்செல்லவந்த பாவிகளாகிய வம்புசெறி தீங்கினர் தம்கண்ணில் தெரியாது தூரத்தே நீங்குவதே நல்லநெறி என்றமையால் இவர்களது தெரிசன பரி சனம் இன்றி ஒழிவதே ஆன்மலாபமும் முத்தி வீடு என்னும் மனைகட்டுவதற்குக்கோலிய அஸ்திபாரம் (அடிப்படையும்) ஆகும்.

வெண்பா.

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்ப துவுந்தீதே — தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந்தீ தே.

என்ற ஔவை பிராட்டியாரின் அமுதமொழிகொண்டு பாவிகட்குரிய நரகவியல்பின் விடவேகத்தைத் தடுத் துப் பரிசுத்தமாகிய மண்ணுலகின் மகிமை சிறிது சொல்வோமாக.

மண்ணுலகவியல்.

வெண்பா·

தேவினத்திற் சீர்த்த சிவனுக்கும் நாரணற்கும்
மூவிலட்ட மூர்த்தத்துள் முன்னதுவாய்த்—தேவியுமாம்
மண்ணுலகம் பெற்ற மகிமை பலபலவென்
றெண்ணுலகத் தெஃதடைந்த தே.

வசனம்·

மண்ணுதல் என்ற சொல் கழுவுதலென்னும் பொருளைக் கொள்ளுதலால் மண்ணுலகம் என்பது கழுவும் உலகம் என்ற காரணச்சிறப்பு வினையாலணைந்த பெயரைத் தாங்கி மிளிர்வதாகும்.

எதனைக் கழுவும் என்னில்?

சகசமலமாகிய ஆணவ விருளினின்றும் ஏகதேசமாக நீங்கப்புரியும் ஆகந்துகமலங்களாகிய மாயை கன்மங்களிலுண்டான தநுகரணபுவன போகங்களில் மயக்க விகாரங்களையுண்டாக்கும் சிற்றறிவாலியற்றும் பாவ புண்ணியங்களான அழுக்குகளை யென்றறிக.

புண்ணிய கன்மம் மேலானதாகவும் அதனைப் பாவத்துடன் கூட்டி அழுக்கென்றதென்னை எனின், "இருள் சேரிருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்ற தமிழ் மறைப்படி தீவினை இரும்பு விலங்குபோன்று இழிவுடன் கூடிய துன்பத்தையும் நல்வினை பொன்விலங்குபோன்று மேன்மையுடைய துன்பத்தையும் தருதலினென்க.

அல்லுறமும் துன்பம் தீவினையானது ஒரே துன்பமயமான இருட் பூமியிலமிழ்த்தும் தன்மையினது, அலவனுவாச்சிற்றின்பம் நல்வினையோ சந்திரனைப்போன்று

நிறைதல் குறைதல் மறைதல் (கறைதல்) களங்க மடைதல் ஆதிய பல்வேறு வகையான விகார விபரீத தியக்க மயக்க முயக்க இயக்கங்களுடன் கூடிய அழுக்கினை உடையதாகலின் ஒன்றுயிசைக்கும் பந்தத்தை யிசைத்து முத்திக்குத் தடையாதலினென்றுணர்க.

எவற்றாற் கழுவதென்னில்?

சரியை கிரியை யோகம் ஞானம் என்ற சதுர்ப்பாதங்களாகிய தவமார்க்கங்களிற் செலுத்தியும், நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகமுத்திரார்த்த பரபோக விராகம், சமாதிசட்கம், முமூட்சுத்துவம் என்ற சாதன சதுட்டயங்களில் ஈடுபடுத்தியும், ஜிவகாருண்ணியம், ஈசுரபத்தி, பாசவைராக்கியம், பிரமக்ஞானம் என்ற (சோபானம்) படிகளில் முறையே ஏற்றுவித்தும்,

*சுபேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, பதார்த்தபாவனை, துரியம் என்ற பூமிகளிற் செல்லத் தக்கதெளிவளித்தும் இன்னும் அவஸ்தை, குணம், கற்பம், பாவம், பதம் முதலிய பல்வேறு வகைகளாலும் என்றுணர்க.

---

* பாவபுண்ணியப் பகுப்பறியாத துற்சனர் சங்கத்தை விலகி ஆன்ம லாபத்துக்கு ஏதுவாகிய சிவஞானத்தைப் பெற விரும்புவது சுபேச்சை, சாதுக்களுடைய உபதேச மொழிகளைக்கேட்டு பிரபல சுருதியாகிய ஞான நூல்களில் சிரத்தையமைவது விசாரணை, மண் பெண் பொன் என்பவைகளிடத்துள்ள ஆசையை நீக்குதல் தநுமானசி, இந்த மூன்றும் துன்பமும் மயக்கமுமே எனத் தன் மனமாரக்காணும் மெய்யறிவை அடைதல் சத்துவாபத்தி, தத்துவஞானத்தில் மனம் உறைத்து நின்று மித்தையான தநுகரண புவன போகங்களில் நினைவிறந்து நிற்றல் அசம் சத்தி, காண்பான் காட்சி காணப்படு பொருள்களாகிய திரிபுடி நீங்கி வஸ்து நிலையிருந்தபடியிருந்த மவுன சுபாவமே துரியம் என்பதாம்.

ஒரு தாயானவள் தனது மக்கள் பலர்களது பக்குவாநுசாரமாக உணவு உடை தொழில் முதலியவற்றை வழங்கி முன்னேற்றமடையச் செய்வதுபோன்று தன்பால் உதிக்கும் தவஞானச் சிறப்பமைந்த உயிர்களுக்கு ஊர்த்துவகதியாகிய சாலோகாதி பதமுத்திகளையும், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் இகலோகாநுபவ சாத்தியமாகிய சதுர்வித புருடார்த்தங்களையும் பெறப் புரியும் துணைக்காரணச் சிறப்புரிமையமைந்து ஆன்மாக்களின் இருதயகமலத்தில் ஞானமாகிய மண்மணத்தை நில் நிலைக்கும்படி செய்து விபுலம் ஆதியகாரகத் திருநாமங்களமைந்த மண்ணுலகின் பெருமையும், தெய்வகதி, சுரகதி, அசுரகதியாகிய பலவேறுவித கதிகளையும் தன்னுள் அமையக்கொண்ட கொத்தும் வித்தும் போன்று விளங்கும் மானிடப் பிறப்பின் அருமையும், (அவாங்) வாக்குக்கு எட்டாததும் (மனோகோசரம்) மனதுக்கு எட்டாததும் ஆகும் என்பது மிகைபட விதந்து வியந்தெடுத்திசையாத், தகைநிறைமாட்சிச் சரதவாசகமே.

இதுவன்றி, எவ்வுலகத்தில் எவ்விதமான உயர்ந்த பதவிகளில் அமைந்த எத்தகையினராயினும்

"மறவாத பத்திஞானம் மற்றொரு தாய்வயிற்றில்
பிறவாத முத்தியின்பப் பேறுமுற் றெய்தவேண்டில்
இறவாத மலகன்மந்தீர்த் திசைசத்தி நிபாதம்கூட்டும்
உறவாத லிம்மண்ணல்ல துயர்ந்தவோர் தலமற்
றுண்டோ"

என்னும் தனித்தலைமைச் சிறப்பமையக் கொண்டதும் அல்லாமல்

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண்டற்று

பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற.''

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

என்னும் தமிழ்மறை வாக்கியப் பிரமாணப்படி ஒரு ஞானமயமான புத்திரனைப் பெற்றெடுத்த தாய் தந்தையர்களது அருமை பெருமைகள் அளவிட முடியாத தாயின், அத்தகைய தவஞானத்துறவுச் சிறப்பமைந்த பல்லாயிரம் புத்திரர்களைப்பெற்ற புனிதத் தாய்தந்தைகட்கெல்லாம் ,தாயகமும் தாரகமுமாகி விளங்கி

அன்னவர் கமலப் பொன்னடிப் பொடிமணம்
மன்னிடத் தாங்கித் தன்னிடத்துதிக்கும்
தவப்பெருக்கினர் தந் தலைக்கணிவித்துப்
பவப்பிணிப் பொழிக்கப் பயின்மருந்துவன்போல்
விளங்கியதன்றியும் மெய்க்கடவுளர்கட்கு
அளந்திடற்கரிதாம் ஆலயம்வழங்கி
அருச்சனை மலரிசை யலங்கலும் புனலும்
திருச்சமை பூசனைத் திரளெலாங் கொண்ட
பூவுல கருமையைப் புகல்வதற்கதனைப்
பாவுறுமாயிரம் பணமுடிக்கணியாச்
சிறப்புறக்கொண்டு செழுந்தவம் ஞானம்
திறப்படு மிருசகத் திரத் தெருண்மணிமொழி
நாவுறு சேடன் நவி லருண்மகிமை
பெற்றிடத் தாங்கிப் பிறங்கினனென்றால்
சிற்றறிவுடனே சின்னாட் பல்பிணி
உற்றயர்மாந்தர்வா யுரைக் கடங்குவதோ
முடியாதென்ன மொழிநான்கெழுத்துட்
படியாச்சரியப் பதத்தடக்குதுமே.

ஆலய வழிபாட்டியல்.

வெண்பா.

கோயில்என்று கண்டுவந்து கும்பிட் டவர்பவங்கள்
மாயில்என்று நின்றுபிற வாதமுத்தி — வாயிலென்று
மேவியற்சி ராலயத்தின் மேன்மைபுகல் வேன்படைத்த
நாவியன்மெய்ப் பேறிசைய நான்.

ஆலயம், ஆ-விரிந்து நின்ற இறைவனது சச்சிதானந்த பரிபூரண இயற்கையின்பமான நித்தியத் தன்மையை அடக்கி விளங்கும் சாந்நித்திய சத்தியை ஞானயோக சித்தர்கள் தமது உபாசனைக் கண்கொண்டு காண்பதற்கும், மற்றுள்ள சரியை கிரியையாளர்கள் வழிபாடு புரிந்து மாயை கன்மங்களைப்போக்கி உபாசனைக்கண்பெறுவதற்கும் துணையாகி லயசத்திக்கு மூலகாரணமாய் நிற்கும் விக்கிரகத்துக்குத் தூலமாய் விளங்கும் தலம் ஆகி மிளிர்வது.

உலக விடயபோக அதிகார சத்திகளாகிய வலையினிடத்தில் அகப்படச்செய்து யாதொரு பிரயோசனமுமின்றி அலைக்கும் காமிய இச்சையினின்றும் பொங்கி எழுந்த வீண் விருத்திகள் அனைத்தையும் ஒடுங்கப் புரிவதற்கும், உயிர்க்குறுதிபயக்கத்தக்க நிஷ்காமிய பத்தி ஞானங்களுக்கு ஏதுவாகிய நிவிர்த்திகலை இச்சைக்கு நிலைக்களமாய் விளங்கும் தெய்வப் பிரீதியாகிய பணிவிடைகளை இயற்ற வைப்பதற்கும் தலமாய் விளங்குதலின் ஆலயமாம்.

தன்னைக் கண்ணால்கண்ட மாத்திரத்திலேயே நாஸ்திகமாயைகன்ம மயமான உலகசம்பந்த வாழ்க்கை மோகத்தின் வயப்பட்டு ஈர்த்துச் செல்லும் மனவேகத்

தைக் கெடுத்தும். (இதனை வேகங் கெடுத்தாண்ட வேந்தன் என்னும் மணிவாசகத்தாலறிக.) இதனால் வேகமற்றமனமே விவேகமாகின்றது என்பது பெற்றும். அவ்வாறாகிய விவேகக்கண் நமக்கு உண்டாகியபோதே நமது மனக்கண்ணின்முன் தெய்வமானது, அநித்திய போகத்தில் ஆழ்ந்து மயங்கி, தவங்கிடந்து உலகப் பிரசித்தியான வரம்பெற்ற இஷ்டர்களாகியும் வரம்பற்ற துஷ்டர்களாகியும் விளங்கிய அசுர சம்பத்துடையவர்களைச் சங்கரித்த மறக்கருணை லீலாவிநோதங்களும், ஆலயவழிபாடு பத்தர்கள்பணி ஆதிய சற்கன்மங்களிலேயே தமது மனம் வாக்கு காயங்களாகிய திரிகரணங்களையும் ஈடுபடுத்தி அதனாலுண்டாகும் ஆனந்தத்திலே அழுந்தி மூழ்கி நின்று பாடியும் ஆடியும் பரவசம் அடைந்தும் நின்ற நிலையும், அவர்களது பத்திவலையிற் பட்ட இறைவனும் தன்னுள்ளத்தில் எழுந்த பெருங் கருணையால் விழுங்கப்பட்டு, தன்பெருமை தானறியாத் தன்மையனாய் அன்பர்களின் ஏவலாளன் போன்ற திருவுருவந்தாங்கி அவர்களது குற்றேவல் புரிந்து அறக் கருணையை விளக்கும் தெய்வசம்பத்தமைந்த சிஷ்ட பரிபாலன சரித்திராமிர்தங்களும் விளங்கி நித்திய அநித்திய வாய்மையையும் வேரூன்றச் செய்கிறது.

இத்தகைய பத்தி அநுபவ அற்புத விளக்கங்கள், ஏதோ தாங்கள் வருந்திப்புரிந்த கன்மயோகாநுபவத்தாலடைந்த ஏகதேச சித்திகளைக் காட்டி உலகத்துள்ள பாமரமக்களை வஞ்சித்து மயக்கி அவர்களால் புனைந்து கூறும் மீக்கூற்றுப் போலியுபசார வசனங்களைக் கேட்டுத் தானே சர்வசத்தியும் உள்ள கடவுள் என்றும் தனக்கு மேலான பரம்பொருள் ஒன்று கிடையாதென்றும் தன்னையே யாவரும் வணங்கவேண்டும்

என்றும் கூறி இரணியனைப் போன்ற நிலையிலமைந்து பசுஞான மயக்கத்தின் மூழ்கித் தருக்கிச் செருக்கித் திரியும் வாய்ப்பதர்களாகிய பாதகர்கட்கு ஒருபோதும் அமையாது என்பதே நாம் நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் பின்பற்றிக் கண்ட கலங்காத முழுத் துணிவாகும்.

எத்தகைய விசித்திர வேலைப்பாடுகளமைந்த அலங்காரமணிமண்டப மாடகூடங்களைக் கொண்டு விளங்கும் அற்புத நகரமாயினும், கோயில் என்ற ஒன்றைமாத்திரம் தன்பால் அமையக்கொண்டது இல்லையாயின் அதனை நமது திருநாவுக்கரசர் எவ்வாறு வருணித்துள்ளார், இல்லை இகழ்ந்து அருவருத்துள்ளார் என்பதை நன்ருக ஊன்றி நோக்குமின்.

திருக்கோயிலில்லாத திருவிலூரும், திருவெண்ணீறணியாத திருவிலூரும், பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும், பாங்கினொடுபலதளிகளில்லாவூரும், விருப்போடு வெண்சங்கமூதாவூரும், விதானமும் வெண்கொடியுமில்லாவூரும், அருப்போடு மலர் பறித்திட்டுண்ணாவூரும் அவையெல்லாம் ஊர், அல்ல, அடவி, காடே.

ஆதலின் ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆலயம் இல்லாத ஊரை எவ்வாறு கருதியிருந்தார்கள். கோயில்கள் இல்லாத ஒரு வெற்றிடத்தை லட்சியப் படுத்திச்சென்ற நிகழ்ச்சி அவர்களது சரித்திரங்களில் எவ்விடத்திலாவது உண்டா? இருந்திருப்பின் அவர்களது சரித்திரமும் நமது வாயாடிச் சோம்பேறிச் சித்தர்களது சரித்திரம்போன்று அவர்களே ஆட்டைத் திதி செய்யும் முறையில் "மடிமடிக் கொண்டொழுகும்

பேதை பிறந்த குடிமடியும் தன்னினு முந்து" என்ற தமிழ்மறை முறைப்படியன்றோ மண்மூடிப்போயிருக்கும், ஆதலின் இத்தகைய கத்துக்குட்டிகளின் சத்தத்திற்குச் செவிகொடாது தெய்வசாநித்தியத்தன்மை, ஆலயம் விக்கிரகம் அடியார் உயிர்கள் சராசரங்கள் ஆகிய அனைத்தினும் உண்டென்று காணும் ஆஸ்திகராகி வாழ்வோமாக. இத்தகைய குட்டிச் சாத்தர்களாகிய நமது அநாத்ம சகோதரர்களது கொள்கைகளை மறுத்துரைப்பது "தீயோர் குணங்களுரைப்பதுவுந்தீதே" என்ற நமது ஔவைப் பிராட்டியாரின் அமுத மொழியை நிராகரித்த தோடத்தின் பாற்படும் என்னும் பயத்தை என் மனத்திற்குப் புகட்டும் அறியாமையை அவர்களால் திருவாய்மலர்ந்தருளியுள்ள "ஆலயம் தொழுவது சாலவும் நன்று, வையந்தோறும் தெய்வம் தொழு" என்னும் கட்டளைகள் என் சிரசில் பொன்முடியாய் அவிர்ந்து அரசத் தன்மையை வழங்கி அவர்களைக் கண்டனை தண்டனை செய்யத் தூண்டுவதால் இதனல் ஏற்படும் குணமோ குற்றமோ பிராட்டியாரையே சார்வதாகும்.

நமது அநாத்ம சகோதரர்களாகிய கொக்குகளின் மாற்றங்களையும் கூற்றங்களையும் மெய்யென்று நாம் நம்புவோமாயின் பந்தமுத்திகளைப் பகுத்தறியும் விவேகமே சூனியப்படுதலின் பின் அடையும்மோட்சமும் டகரவொற்றுக்கெடுதல்விகாரமுற்றமோசமாகவன்றோ முடியும். ஆதலின் அவர்கள் தமது போலியுபதேசத்தைப் பாமர மக்களது செவிகளிடத்தில் விற்காமலும், ஏமாந்து மற்றவர்கள் வாங்காமலும், ஒருவேளை வாங்கினுலும் புசித்து அவ்விட வேகத்தால் அறிவை இழவாக்கிக்கொள்ளாமலும், உண்டு மயங்கினவர்

களையும் ஆஸ்திக அமிர்தப்பிரயோகத்தால் மாற்றித் திருத்துமாறு தூண்டும் அஸ்திரப்பிரயோகமே இவ் வசனத்தின் லட்சியமாகும்.

அவர்கள் சொல்வதைச் சத்தியம் எனக்கொள்ளில் பரவுலகமும் போற்றியழைக்கும் பரமாசாரியமூர்த்திக ளாய் விளங்கி இகவுலகத்தமைந்த ஆஸ்திக பக்த ஜனங்களால் தமது உயிரினும் ஓம்பப்படும் ஒழுக்கங்கள் அனைத்துந் திரண்டு திருமேனிகொண்டவரும் முத்தி வழிகாட்டும் பரமுத்திமான்களுமான, மாணிக்கவாசக சுவாமிகள், பாண்டியனுக்குக் குதிரைவாங்குவதன் பொருட்டுக் கொண்டுசென்ற திரவியங்கள் அனைத்தையும் திருப்பெருந்துறையிலுள்ள ஆலயத் திருப்பணியில் செலவிட்டு, பாண்டியன் புரிந்த தண்டனைகளைப் பொருட்படுத்தாது அநுபவித்து அவனுக்குத் தெய்வக் காட்சியையும் சாக்கிரத்தில் தரிசிக்கக்காட்டியும் அவனடித்த பிரம்படியானது அண்டபிண்ட சராசரங்களனைத்தினும் படப்புரிந்த அகண்டானந்த அநுபவ மாட்சியையும் துலக்கி, அவன் பயந்து வியந்து வணங்கிய காலத்திலும் பெருமை கொள்ளாது பெருங்கருணை பொங்கி யாது திருவாய் மலர்ந்தார் என்னில்,

என்னைமுற் றிலுமேற் றுள்ளவனருளால் என் சுகதுக்கமுற்றியலும், உன்னைநான் சினவேன் உனக்குமோர் செயலின்று உன் பொருளாற் செய்புண் ணியம் உன், தன்னையேசாரும் எனக்கிகபரத்தின் சார்பினியின்று இது சரதம், முன்னைநாள் தவமிக் கிழைத்துளாய் அதனல் முதலிருக்கான் நின்முன் திகழ்ந்தான்.

(புலவர் புராணம்).

தன்பொருட்டாற் பரமன் காட்டிய தெய்வீகக் காட்சியை, தற்பெருமைச் சுட்டாக்கிக் கொள்ளாது, அடிகள் பாண்டியன்மீதேற்றி, முன்னைநாள் தவமிக்கிழைத்துளாய் என்ற பேரருட்குணத்தின் மாண்பு உள்ளத்தை அள்ளுகின்றதன்றே? பிற்காலத் தவதரித்த திருவருட் பிரகாசவள்ளலார் இதன் உண்மையை

"பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்
எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும் வையைநதி
மண்சுமந்து நின்றதுமோர் மாறன் பிரம்படியால்
புண்சுமந்துநின்றது முன்பொருட்டன்றே
புண்ணியனே"

என்ற கவியால் உள்ளபடி விளக்கிக்காட்டியருளினர். எவ்வாறெனில், பாண்டியராஜன் பரித்திரளெங்கே, பணப்பொதியெங்கே என்ற பைத்தியத்தால் விழுங்கப் பட்டவனாகி சொற்பனத்திலும் தெய்வக்காட்சி காண வேண்டும் என்ற இச்சையற்றவனாக இருந்தான், தெய்வமும் அவனுக்குக் காட்சி கொடுக்கவேண்டும் என்ற நிலையிலமையாது வந்தியின் கூலியாள் என்ற வேடத்துடன் விளங்கி அவனால் வீசிய பிரம்படியேற்று, தன் பரத்துவ மகிமையைச் சூக்குமமாய்ப் பாண்டியன் மட்டன்றி எல்லாவுயிர்களும் அறியக்காட்டியதால் விளங்கும்.

திருநாவுக்கரசர், உழவாரத்திண் படையருத்திருக் கரத்தோடு காட்சியளிக்குந்தன்மை நமக்கு எதை உபதேசிக்கின்றது, ஆலயத் திருப்பணியின் மகிமையைத்தான் என்றுணரும்வரை நமதுமனத்திற்கு நிவர்த்தி இல்லை அல்லவோ? தாம் திருப்பணிபுரிந்த காலத்தில் தோன்றிய நவமணித்திரள்களை யாது

செய்தார்? அருமை பாராட்டிப் பெட்டியில் வைத்துப் பூட்டினரா? அல்லது உழவாரப்படையால் குழிவெட்டிப் புதையல் செய்தனரா? இல்லை இல்லை; தமது திருப்பணி யுரப்பினின்றுந் தோன்றிய ஞானவைராகத்தமைந்ததாகிய "சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடு வானளத்தருவரேனும், மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்" என்ற திருத்தாண்டகத்தின்படி, திரு-செல்வத்தின் (காமத்தை) தாண்டு-கடந்த, அகம்-திருவுள்ளமுற்றவ ராய் குப்பையாக மதித்தெறிந்தனர். நாமாயிருந்தால் என்னசெய்வோம். ஆலயத்திருப்பணி செய்ததாலடை யும் கூலிப்பயனாகிய கேலிப்பயன் கைவந்ததென்றுகருதி அதனைப் பாதுகாக்கும் சிரத்தையிலமுந்தி உடனே இச் செல்வந்தோன்றுதற்குக் காரணமாகிய திருப்பணிக்கும் அதற்கு மூலமாகிய உழவாரப்படைக்கும் அல்லவோ அக்கதியை யுதவியிருப்போம். இடையறுப் பேரன்பு மழைவாரு மிணைவிழியு முழவாரத்திண் படையறுத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும் நடையறுப் பெருந்துறவும் ஞானப்பாடல் தொடையறுச் செவ்வாயும் படைத்த வாகீசப் பெருந்தகை தாபித்தருளிய தாச மார்க்கச் சிறப்பு என்னே? இத்தகைய அற்புதச் செயல்கட்கெல்லாம் மூலகாரணமாய் நின்றது ஆலயத் திருப்பணிப்பெருமை என்பதன்றி வேறு என் சொல்வது.

பெரியாழ்வார் பாண்டியன் அவையில் தூக்கிய அக்கிழியைச் சொற்கவியாம் வாளாற்கொய்து மைந்தரும் மன்னனும் பார்க்கச் செந்தகைப் புட்பரி மிசைமால் பல தேவரொடும் வானில் திகழக்காட்டிப், பந்தமற்றோர்க்கே இனிதாம் பல்லாண்டுத் துதியும் அன்பில் பாடி, விட்டுணுசித்தன் என்னும் திருப்

பெயரமைத்து மன்னவன் முதலானோர் வணங்கி வாழ்த்தப்பெற்றும்; அப்பெருமையால் மயங்கி மலர்மாலை தொடுத்தணிதலாகிய பணியை, தொண்டுசெய்யும் நன்னெறியைத் துறக்கொண்ணாதே என்ற தியானநுபூதிக்கி லட்சியமாய் வில்லிபுத்தூர் சென்று வடபெருங் கோயிலுடையார்க்குப் புரிந்துவந்ததனாலன்றோ? ஆண்டாள் சூடிக்கொடுத்ததும் ஸ்ரீமந் நாராயணன் உவப்புடன் அணிந்துவந்ததும், உலகமுவந்துகொண்டாடச்செய்வான் வேண்டி அம்மையார் ஓர் நாளில் சூடாதுவிட்டதும் அதை இறைவன் ஏற்றுக் கொள்ளாததும் பின் அவ்வாறியற்றிவந்த ஐதிகம் அன்றும் இன்றும் என்றும் எத்தலங்களிலும் நடைபெற்றுவரும் அற்புதச் செய்கைகட்கு வித்தாகி நின்றதும் ஆலய வழிபாட்டாலன்றி வேறு காரணங்களால் இயல்வதாகுமோ?

திருமங்கையாழ்வார் திருவரங்கம் கோயில் திருப்பணி செய்த கூலியாட்களும் மற்றுள்ளவர்கள் போல் இயமனால் கொல்லப்பட்டு நரக சுவர்க்காநுபவங்களிற் சுழன்று பிறப்பமையவிடக்கூடாது, என்ற பெருங்கருணையால் காவிரி நதியில் தள்ளி வைகுந்த பதத்தில் அமைத்ததற்குக் காரணமாகி நின்றது ஆலயத் திருப்பணியின் மகத்துவத்தால் ஏற்பட்டதன்றோ?

சிரங்கப் பணிசெய்தலும் சிற்சில
பேரங்கத்தைப் பெருநதியூடுதாழ்த்
தேரங்கக் கதிநல் கலுமெண்ணில் பல்
லோரங்கங் குரைக்கின்ற துண்டுண்டரோ.

(புலவர் புராணம்).

பத்திராசல ராமதாசர், ஆலய தரிசனம் செய்யுங்கால் மிகக்கிலமடைந்திருத்தலைக்கண்டு சகியாராய் எப்படியுஞ் செய்துமுடிக்க வேண்டுமென்னும் பெருங் காதலால் விழுங்கப்பட்டவராய்ச் சிற்பர்களால் கணக்கெடுத்து ஆறுலக்ஷம் வராகன் வேண்டும் எனச் சொல்ல வினவி தானிசாவுக்குக் கொடுக்கவேண்டிய ஆறுலக்ஷம் வராகனையும் இராமார்ப்பணம் புரிந்து திருப்பணிமுடித்து, அரசன் சிறைச்சாலையிலிட்டு பன்னிரண்டு வருடம்வரை புரிந்த எல்லையில்லாத பெருந்தண்டனைகளையும் ஸ்ரீராமசந்திரனது திருவருள் துணையால் கலங்காத சித்தத்துடன் அநுபவித்திருந்து ஸ்ரீராமசந்திரனது திருவருட்காட்சியைத் தானிசாவும் தரிசிக்கப்புரிந்து திருவருண்மயமாகிய ஆறுலக்ஷம் வராகனையும் பெற்ற தானிசா மன்னன் உம்மால் நான் இராம தரிசனம் பெற்றேனென்று வியந்து துதிக்கவும் நீயே பாக்கியவான் என்று முன் மாணிக்கவாசகர் சொல்லியவாறே சொல்லும் திருவருட்குணம் பொருந்தி அவன்மீது சிறிதளவான வெறுப்பும் சினமும் அமையாத பெருங்கருணை "சால்பிற்குக் கட்டளை யாதென்னில் தோல்வி துலையல்லார் க்ண்ணுங் கொளல்" என்ற தமிழ் மறைக்கு ஓரிலக்கியமாகி மிளிர்கின்றது. இத்தகைய அழிவற்ற பத்தி சித்தி முத்தி நிலையமைந்த பெரியோர்களது மகிமை முழுதும் திரட்டி நின்று காட்சியளித்து நம்மையும் அவர்கள்போலச் செய்கின்றேன் என்று த்வசம் கட்டி அறைகூவும் பெருமை யமைந்த திருக்கோயில் கொண்டுள்ள சிறப்பையெல்லாம் அன்பர்கள் சொல்லளவையாலன்றி அநுபவ அளவைக் கொண்டு உணரும்படிவிட்டு இனி விக்கிரக வழிபாட்டியல் சிறிது கூறுவேனாக.

விக்கிரகவியல்.

வெண்பா.

உக்கிரகன் மத்திரண்முற் ருேட்டிவழி பாடுசெய்வார்க்
கக்கிரகண் யப்பயன்முற் றன்பிலருள் — விக்கிரக
மாட்சியொரு சற்று வழுத்திடுவேன் வன்பவத்தின்
மீட்சியருட் காட்சியுற வே.

கிரகம் என்பது பற்றுதல், அடக்குதல் என்ற பொருளையுடையது. இது தூலம் சூக்குமம் காரணம் என மூன்று வகைப்படும்.

அவற்றுள் முதலாவது கிரகம், இரண்டாவது நவக்கிரகம், மூன்ருவது விக்கிரகம்.

இவற்றுள் முதலாவது கிரகம் இது மனை என்னும் பெயருடன் கல் மண் நீர் அக்கினி முதலிய பூதங்களின் துணைக்கொண்டு கிரியாசத்தி சம்பந்தமுற்ற தொழிலாளிகளின் முயற்சியால் செய்யப்பட்டு தேச அளவைக் குட்பட்டு மனிதர் வசிக்கத்தக்கதாய் நின்று கால அளவையால் அழியுந் தன்மையுடையது.

இரண்டாவது நவக்கிரகம் இவை ஒன்பது என்னும் எண்ணிக்கை பெற்றதால் அப்பெயரேற்று நின்றன. இவை இச்சாசத்தியின் கூறுபாடுள்ளவை எதுபார்வைக்கு மாத்திரம் கோசரமாகி பிடிக்கமுடியாததேர் அது இச்சாசத்தியிலக்கணம். இத்தகைய நவக்கிரகங்கள் தேசங்களை, சிருஷ்டி திதி சங்காரம் என்னும் முத்தொழிற் படுத்தி ஆன்மாக்களது கன்மங்களை அநுபவிக்கச் செய்வதற்கு மாத்திரம் சாதனமாயுள்ளன.

மூன்ருவது விக்கிரம் இது விசேஷமாகக் கிரகித்து வேருகி நிற்கும் வீடு என்று விளங்கலால் அப்பெயர் பெற்றது. இது முதலிற் கூறிய கிரியாசத்திமயமான உருவத்தன்மை ஒன்றையே காட்டி சரியை கிரியை யாளர்களின் பணிவிடை பூசனையாதியகொண்டு அதன் பயனுக அவர்களுக்குச் சாலோக சாமீபமாதிய பயன்களைச் சரீராந்தத்தில் கொடுத்து அங்கும் தவத் துணர்வை விருத்திசெய்து அதற்கு மேலுள்ள யோக பாதத்தை வழங்கிப் பூவுலகில் மானிடப் பிறப்பிற் புகுத்தும், அத்தகைய வரம்பெற்றுவரப்பெற்றவர்களே உயிரநுபவமுள்ள உபாசனையாளர்கள் என்னுந் தகுதி யிலமைந்தவராவார்கள். அவர்கள் இரண்டாவதாகிய இச்சாசத்திப் பிரகாசமமைந்த காலதத்துவமாகிய சந்திரன் சூரியன் அக்கினிமயமான உடலுயிரில் நிலைத்து நின்று அதன் காரணமாகிய தொல்லுயிர் என்னும் அண்டவிளக்கத்தை அமையப்பெறுவதால் நாமரூப சடகற்பனைகளனைத்தும் பகல் விளக்குப் போல் ஏகதேச மாகத் தோன்றும்படி விளங்கி நிற்கும் சிற்கற்பனையால் சிருட்டிக்கப்படும் பதிகரணம் வாய்ந்து ஆலயத்துள்ள மூர்த்திகளின் சாந்நித்தியத் தன்மையைப் பிரத்தியட்ச மாய்க் கண்டநுபவித்துத் தம்மை வழிபடும் அன்பர் களுக்குத் தமது நிலை உண்டாகக் கடாட்சித்துப் பரசா தன அநுபவானந்தம் வரப்புரிந்தும் பொதுவகையில் கண்டு வணங்கும் மனிதர்களுக்கு அவர்களது பக்குவத் தளவில் வேண்டிய இஷ்டகாமியார்த்தங்களைச் சிறப் பாகவும் பரகதிக்கு வேண்டிய மார்க்கத்தைப் பொது வாகவும் காட்டும் பரமாசாரிய மூர்த்திகளாய் விளங்கி யும், உலகத்தமைந்த ஆலயங்கள் தோறும் சென்று சென்று சாந்நித்தியசத்தியை அதிகப்படுத்தியும், ஆண் டாண்டுள்ள இளம் பக்குவத் தொண்டர்களைத் தமது

கிருபா நோக்கத்தால் காடாட்சித்துப் படிக்கிரமத்தில் ஏறப்புரிந்தும், நாஸ்திகர் நிரீச்சுரவாதிகளை அபசெயப் படுத்தி அடக்கியும், தாம்பசுகரணபந்த விகாரத்தில் அழுந்தியிருந்த காலத்தில் அடைந்த துன்பங்களையும் இறைவன் திருவருள் துணைகொண்டமைந்த பதிகரண தெய்வாநுபவம் பெற்றபின் அநுபவித்த செயல்களை யும், உலகத்தமைந்தவர் அனைவரும் பாடியாடிப் பணி ந்து போற்றும்படி ஞானவாணியால் உதிக்கச்செய்யும் பாடல்களால் இறைவனைத் துதித்துத் தமது அடிமைத்திறம் திறம்பாத செயல்களால் உலகத்தி லுள்ளவர்கட்கு ஒரு வழிகாட்டிகளாய் ஞானசூரியன் போன்று அழிவற்ற மெய்ப்புகழ் உடம்பமைந்து விளங்குவர். இதன்மேலுள்ள மூன்றுவதான சொருப ஞானசித்தி நிலையின் மகிமை சொல்லளவையில் அடங் காததாகும்.

ஆகவே இத்தகைய முத்தியின்பத்துக்குக் காரணம் ஞானமும், அதற்குச்சாதனம் யோகமும், அதனை அடையச்செய்வது கிரியையும், அதற்குமூலம் சரியை யும், அதற்காதாரம் ஆலயமும் ஆதலின் ஆலய வழி பாடு சரியைகிரியை ஆரம்பபத்தர்கள், யோகஞானநு பவங்களைப் பெறும் பொருட்டு இன்றியமையாது செய் தாகவேண்டிய அவசியம் உள்ளதாயும், யோகஞானநு பவம் கைவல்லியம் பெற்றவர்கள் நன்றியறிதலாகவும் திருவருள் வல்லபத்தை மற்றவர்களும்கண்டு தெளிந்து பத்திசெய்து முத்தியடைவதற்காகவும் இன்றியமை யாதுசெய்யும் முழுக்கடமைப்பாடுடையதாயும் உள்ள மையின் யாவரே இதனை மறுக்கவும் வெறுக்கவும் துணி பவர்கள் ஒருவரும் இல்லை இல்லை இல்லை முக்காலும் இது சத்தியம்.

இன்னும் இதுபற்றி எழுதப்புகின் விரிந்து கொண்டே போகுமாதலின் இவ்வளவில் நிறுத்தத் துணிகின்றேன். இது ஆலய வழிபாட்டில் அன்பர்களுக்குச் சந்தேக விபரீதங்களின்றி ஊக்கத்துடன் நுழைந்து பாடுபடத் தூண்டும் அளவில் நின்றபொது நூற் சுருக்கமாகும். ஆதலின் பல சமயப்பத்தர்களும், தத்தம் சமய மதசம்பிரதாயங்களை நன்குணர்ந்த குருமார்கண் மூலமாக உபதேசசித்தாந்தங்களை உணர்ந்து பத்தி சிரத்தையுடன் அநுஷ்டித்துச் சித்திமுத்திப் பேற்றை அடையும்வண்ணம் நமது ஆன்ம சகோதரர்கள், அனைவரையும் சன்மார்க்க அனுஷ்டானத்திற் புகுவித்து அநுக்கிரகிக்கும்படி கருணைக்கடலாகிய இறைவனது திருவடிகளையும் திரிகரண பூர்வமாக, சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றனன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

வாழி விருத்தம்.

இகபரசாதனம் வாழி யிங்கிதன்
அகமிசை நலங்களை யகத் தமைத்தருட்
சுகமிசை யன்பர்தாட் டுகள் புனைந்திருஞ்
சகமிசை யுயிர்க்குலந் தழைத்து வாழியே.

தெய்வமே துணை.

கோயமுத்தூர்
கூட்டுறவு அச்சுக்கூடம், லிமிடெட்.